## இஸ்லாம் கூறும் இனியவை நாற்பது

தொகுப்பு: நெல்லை இப்னு கலாம் ரசூல்

---

- ஏகத்துவம்
- ஸலாம் கூறுதல் (முகமன்)
- இறந்தவரின் நல்லடக்கத்தில் கலந்து கொள்தல்
- பொறுமை கொள்தல்
- இன்முகம் (முகமலர்ச்சி)
- உண்பது பருகுவதில் ஒழுக்கம்
- நல்லதைப் பேசுதல் (நாகாக்க)
- பிற உயிர்களிடம் பரிவு
- மென்மை (இனியசொல் கூறுதல்)
- அருள் மறையை (குர்ஆன்) ஓதுதல்
- கல்வி கற்க ஆர்வம்
- நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்
- இரக்கம் காட்டுதல் கிருபை
- சமாதானம் பரிந்துரை
- அமானிதம் பேணுதல்
- பெற்றோர் நலம் பேணுதல்
- உறவினர்களைச் சேர்த்துக் கொள்தல்(அனுசரித்தல்)
- பிறரின் குறையை மறைத்தல்
- பெண்கள் நலம் நாடுதல்
- சுத்தம் என்றும் சுகம் தரும் (ஒளு)
- வியாபாரத்தில் நேர்மையை கடைபிடித்தல்
- நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து கூறுதல்
- அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு கூர்தல்
- வணக்க வழிபாடுகளில் நடு நிலை
- அண்டை வீட்டார் நலம் பேணுதல்
- குடும்பத்தார்க்கு செலவு செய்வதின் பயன்
- நீதி நேர்மை
- நோயாளிகளின் நலம் விசாரித்தல்
- தான தர்மங்கள் செய்தல்
- வீர மரணம் (ஷஹீது) அடைதல்
- வெட்கம்
- விருந்தாளியை உபசரித்தல்
- இரகசியம் பாதுகாத்தல்
- பாவமன்னிப்பு
- உழைத்து உண்ணுதல்
- போதுமென்ற மனம், எளிமையைப் பேணுதல்
- உண்மைப் பேசுதல்
- உறுதியுடன் நிலைத்திருப்பது
- ஆடையும், அவற்றின் ஒழுக்கங்களும்
- சபை ஒழுக்கம்

### இஸ்லாம் கூறும் நல்லொழுக்கம்:

அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. (33:21)

(நபியே!) நீர் கூறும் "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான் மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான். (3:31)

மக்களிற் சிறந்தவர்,எவரது ஆயுள் நீளமானதாகவும்,அவரது செயல் அழகானதாகவும் இருக்கிறதோ அவரேயாவார். திர்மிதி : அபூ ஸப்வான் அப்துல்லாஹ் பின் புஸ்ரில் அஸ்லமீ(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்கள், மக்களில் மிக அழகிய குணமுடையவர்களாக விளங்கினார்கள். புகாரி,முஸ்லிம் : அனஸ்(ரலி).

கியாமத் நாளில் முஃமினான மனிதனின் 'மீஸான்' தராசில் மிகக் கனமாக இருப்பது, நற்குணத்தைத் தவிர வேறில்லை. நிச்சயமாக அல்லாஹ் தவறான பேச்சுகளை பேசும், தீய செயல்களைச் செய்யும் மனிதனைக் கோபிக்கின்றான். திர்மிதி: அபுதர்தாஹ்(ரலி).

முஃமின்களில் அழகிய குணமுடையவரே அவர்களில் ஈமானில் பரிபூரணமானவர் ஆவார். உங்களில் சிறந்தவர் உங்கள் பெண்களிடம் சிறந்தவரே ஆவார். திர்மிதி : அபுஹுரைரா(ரலி).

## ஏகத்துவம்

---

112:1 (நபியே?!) நீர் கூறுவீராக அல்லாஹ் அவன் ஒருவனே.

112:2 அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.

112:3 அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை.

112:4 அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.

2:255 அல்லாஹ்-அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன் என்றென்றும் நிலைத்திருப்பவன் வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான் அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன் மகிமை மிக்கவன்.

59:23 அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர, வேறு யாரும் இல்லை. அவனே பேரரசன் மிகப்பரிசுத்தமானவன் சாந்தியளிப்பவன் தஞ்சமளிப்பவன் பாதுகாப்பவன் (யாவரையும்) மிகைப்பவன் அடக்கியாள்பவன் பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

ஆதமின் மகனே! என்னை நீ அழைத்த பொழுதெல்லாம், என் மீது நீ ஆதரவு வைத்த பொழுதுதெல்லாம் நான் உன்னை மன்னித்தேன். உன் நிலை எப்படி இருந்த போதிலும் சரியே! நான் அதனை பொருட்படுத்தவில்லை. ஆதமின் மகனே! உன் பாவங்கள் வானத்தின் முகட்டைத் தொட்டு,பின்னர் அவைகளுக்காக நீ என்னிடம் பிழை பொறுப்பு இறைஞ்சினாலும், நான் உன்னை மன்னித்து விடுவேன். ஆதமின் மகனே! நீ பூமி நிரம்பப் பாவங்களைக் கொண்டு வந்து, பின்னர் எனக்கு நீ எதயும் இணைவைக்காதவனாக என்னைச் சந்திப்பாயானால், நான் உன்னிடம் பூமி நிரம்ப மன்னிப்பைக் கொண்டு வருவேன். (அனைத்தையும் மன்னித்து விடுவேன்). திர்மிதி: அனஸ்(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்களின் சமூகம் ஒரு காட்டரபி வந்து இறைவனின் தூதர் அவர்களே! இரண்டு அவசியமாக்கி வைக்கும் விஷயங்கள் எவை? என்று வினவினார். அதற்கு அண்ணலார், யார் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை வைக்காமல் மரணமடைகிறாரோ, அவர் சுவர்க்கத்தில் நுழைவார். யார் அவனுக்கு ஏதாவதொன்றை இணைவைத்தவராக மரணமடைகிறாரோ, அவர் நரகில் நுழைவார் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். முஸ்லிம்: ஜாபிர்(ரலி).

உயர்ந்தவனான அல்லாஹ் கூறுகிறான்:

ஆதமின் மகன் என்னை ஏசுகிறான். அது அவனுக்கு தகாத செயலாகும். அவன் என்னை நம்ப மறுக்கிறான். அது அவனுக்கு தகாத செயலாகும். எனக்குக் குழந்தை இருப்பதாக அவன் கூறுவது தான் அவன் என்னை ஏசுவதாகும். நான் ஆரம்பமாகப் படைத்ததைப் போன்றே மீண்டும் அவனை என்னால் (உயிராக்கிக்)கொண்டுவர முடியாது என்று அவன் கூறுவது தான் அவன் என்னை நம்ப மறுப்பதாகும். புகாரி: அபூஹுரைரா(ரலி)

## ஸலாம் கூறுதல் (முகமன்)

4:86 உங்களுக்கு ஸலாம் கூறப்படும் பொழுது, அதற்குப் பிரதியாக அதைவிட அழகான (வார்த்தைகளைக் கொண்டு) ஸலாம் கூறுங்கள் அல்லது அதையே திருப்பிக் கூறுங்கள் - நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களின் மீதும் கணக்கெடுப்பவனாக இருக்கிறான்.

6:54 நம் வசனங்களை நம்பியவர்கள் உம்மிடம் வந்தால், "ஸலாமுன் அலைக்கும் (உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக)" என்று (நபியே!) நீர் கூறும், உங்கள் இறைவன் கிருபை செய்வதைத் தன் மீது கடமையாக்கிக் கொண்டான் உங்களில் எவரேனும் அறியாமையினால் ஒரு தீமையைச் செய்து விட்டு அதற்குப் பின், பாவத்தை விட்டும் திரும்பி, திருத்திக் கொண்டால், நிச்சயமாக அவன் (அல்லாஹ்) மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றான்.

24:27ஈமான் கொண்டவர்களே! உங்கள் வீடுகளல்லாத (வேறு) வீடுகளில், அ(வ்வீட்டிலுள்ள)வர்களிடம் அனுமதி பெற்று, அவர்களுக்கு ஸலாம் சொல்லாதவரை (அவற்றினுள்) பிரவேசிக்காதீர்கள் - (அவ்வாறு நடப்பதுவே) உங்களுக்கு நன்மையாகும் நீங்கள் நற்போதனை பெறுவதற்கு (இது உங்களுக்குக் கூறப்படுகிறது).

ஒரு மனிதர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் இஸ்லாத்தின் நற்செயல்களில் எது சிறந்தது? எனக் கேட்டார். அதற்கவர்கள் (மக்களுக்கு) நீர் உணவளிப்பதும், நீர் அறிந்தவருக்கும்,அறியாதவருக்கும் ஸலாம் உரைப்பதும் ஆகும் என மறுமொழி பகர்ந்தார்கள். புகாரி,முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் அம்ரிப்னு அல்ஆஸ்(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்கள் எங்களுக்கு ஏழு விஷயங்களை ஏவினார்கள். அவை:-

1. நோயாளியை உடல் நலம் வினவுவது

2. ஜனாஸாவை (நல்லடக்கம் செய்ய)பின் தொடர்ந்து செல்வது.

3. தும்மியவருக்கு (யர்ஹமுகல்லாஹ் - அல்லாஹ் உமக்கு கிருபை செய்வானாக! எனக் கூறி) துஆச் செய்வது

4. பலவீனமானவருக்கு உதவி செய்வது

5. அநீதி இழைக்கப்பட்டவருக்கு உதவி செய்தல்

6. ஸலாமைப் பரப்புவது

7. (நல்ல விஷயத்தை)சத்தியம் செய்தவருக்க அதனை நிறைவேற்ற உதவி செய்வது. புகாரி,முஸ்லிம்: அபூ உமாரா பராவுபின் ஆஜிப்(ரலி).

நீங்கள்ஈ மான் கொள்ளாதவரை சுவனத்தில் நுழையமாட்டீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தாதவரை ஈமான் கொண்டவர்களாக ஆகமாட்டீர்கள். உங்களுக்கு நான் ஒரு விஷயத்தை அறிவித்துத் தரட்டுமா? ஆதனை நீங்கள் கடைபிடித்தால் நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துபவர்களாக ஆவீர்கள்! (அவ்விஷயமாகிறது)ஸலாமை உங்களுக்கு மத்தியில் பரப்புங்கள் (உங்களுக்கிடையே அதிகமாக ஸலாம் கூறிக் கொள்ளுங்கள்) முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

## இறந்தவரின் நல்லடக்கத்தில் கலந்து கொள்தல்

---

55:26 (பூமியில்) உள்ளயாவரும் அழிந்து போகக்கூடியவரே.

4:78 “நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் அடைந்தே தீரும் நீங்கள் மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் இருந்த போதிலும் சரியே! (போருக்குச் சென்ற முனாஃபிக்களுக்கு) ஏதேனும் ஒரு நன்மை ஏற்பட்டால் “இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது” என்று கூறுகிறார்கள் ஆனால், அவர்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டாலோ, “இது உம்மிடம் இருந்துதான் ஏற்பட்டது” என்று கூறுகிறார்கள், (நபியே! அவர்களிடம்) கூறும் “எல்லாம் அல்லாஹ்விடமிருந்தே வந்திருக்கின்றன இந்த மக்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? எந்த ஒரு விஷயத்தையும் அவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லையே!”

யார் ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொள்கிறாரோ, அவருக்கு ஒரு கீராத் நன்மை உண்டு. யார் ஜனாஸாவை நல்லடக்கம் செய்யும் வரை அதில் கலந்துகொள்கிறாரோ அவருக்கு இரண்டு கீராத் நன்மைகள் உண்டு. அப்பொழுது அண்ணலாரிடம் இரண்டு கீராத்கள் என்றால் எவ்வளவு? என வினவப்பட்டது. அதற்கு அண்ணலார் இரு கீராத்கள் என்பது இரண்டு மாபெரும் மலைகளைப் போன்றதாகும் எனப் பகர்ந்தார்கள். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

நீங்கள் ஜனாஸாத் தொழுகையைத் தொழுதால் அம்மய்யித்திற்கு இதயத்தூய்மையுடன் (அழகாக) துஆச் செய்யுங்கள் எனநபி(ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன். அபூதாவுத்: அபூஹுரைரா

ஜனாஸாவை விரைவாக நல்லடக்கம் செய்யுங்கள். அது நல்லதாக இருப்பின் நன்மையின் பக்கம் அதனை முற்படுத்தி வைத்து விடுவீர்கள். அது நல்லதாக இல்லையெனில்,உங்களின் பிடரிகளை விட்டு (உங்கள் பொறுப்பை விட்டு) அத்தீமையை இறக்கி வைத்து விடுவீர்கள். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

## பொறுமை கொள்தல்

---

2:153 நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும்(இறைவனிடம்) உதவி தேடுங்கள் நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான்.

42:43 ஆனால், எவரேனும் (பிறர் செய்த தீங்கைப்) பொறுத்துக் கொண்டு மன்னித்து விட்டால், நிச்சயமாக, அது மிக்க உறுதியான (வீரமுள்ள) செயலாகும்.

ஓர் அடியானின் குழந்தை மரணித்து விட்டால். அல்லாஹுத்தஆலா, மலக்குகளிடம் என் அடியானின் குழந்தையைக் கைப்பற்றினீர்களா? என்று கேட்பான். அதற்கு மலக்குகள் ஆம் என்று கூறுவர். அப்பொழுது அல்லாஹ் என் அடியானின் இதயக்கனியைக் கைப்பற்றி விட்டீர்களா? என்று கேட்பான்.

அதற்கும் ஆம் என்று கூறுவர். அப்பொழுது அல்லாஹ், என் அடியான் என்ன கூறினான்? என்று கேட்பான். அதற்கு மலக்குகள், உன்னைப் புகழ்ந்தான், இன்னாலில்லாஹி கூறினான் என்று கூறுவர். அப்போது அல்லாஹு தஆலா, என் அடியானுக்கு சுவர்க்கத்தில் ஓர் வீட்டைக் கட்டுவீராக! அதற்கு பைதுல் ஹம்து (புகழ் இல்லம்) எனப் பெயர் சூட்டுவீராக! என அவர்களிடம் கூறுவான். முஸ்லிம்: அபூ மூஸா (ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்களிடம் சில மனிதர்கள் வந்து உதவி கேட்டார்கள். தங்களிடமுள்ளவை தீரும்வரை, அண்ணலார் அவர்களுக்கு வழங்கினார்கள். தங்களது கரத்திலுள்ளவை அனைத்தையும் செலவழித்து முடித்தபின் அண்ணலார் கூறினார்கள், என் கையில் என்ன செல்வங்கள் உள்ளனவோ! அவைகளை உங்களுக்கு வழங்காது நான் சேமித்து வைக்கமாட்டேன். (என் கையில் உள்ளவை அனைத்தையும் உங்களுக்கு வழங்கி விடுவேன் எனினும்) உங்களில் எவர் பேணுதலை மேற்கொள்கிறாரோ, அவரை அல்லாஹ் பேணுதல் உள்ளவராக ஆக்கிவைப்பான். யார்(பிறரிடம்) தேவையுராது இருக்க விரும்புகிறாரோ அவரை அல்லாஹ் பிறரிடம் தேவையற்றவராக ஆக்கிவைப்பான். (போதுமான வசதியை அவருக்கு அளிப்பான்) யார் பொறுமையை கடைபிடிக்க முயல்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் பொறுமைக்கு நல்லுதவி செய்கிறான். பொறுமையை விடச் சிறந்ததும், மிக விஸ்தீரமானதுமான நன்கொடை எவருக்கும் வழங்கப்படவில்லை. புகாரி, முஸ்லிம்: அபூ ஸயீது ஸஃது பின் மாலிக் பின் ஸினான் அல்குத்ரீ(ரலி).

முஃமினீன் காரியம் ஆச்சரியமானது! அவனது காரியங்கள் அனைத்தும் அவனுக்கு நலவாகும். அது முஃமினைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. அவனுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியது வந்தால் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நலவாகி விட்டது. அவனுக்கு துன்பமளிக்கக்கூடியது வந்தால் பொறுமைக் கொள்கிறான். அது அவனுக்கு நலவாகி விட்டது. முஸ்லிம்: அபூயஹ்யா சுஹைப் பின் ஸினான்(ரலி).

## இன்முகம் (முகமலர்ச்சி)

3:159 அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர் (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள் எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்திவிடுவீராக அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும் பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பேற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான்.

எந்தவொரு நன்மையான செயலையும் இலேசாக எண்ணாதீர்! (இலேசாக எண்ணி அதனை விட்டு விடாதீர்) மலர்ந்த முகத்துடன் உம் சகோதரரை நீர் சந்திப்பதாகிலும் சரியே( மலர்ந்த முகத்துடன் உம் சகோதரரை நீர் சந்திப்பதும், நன்மையான அமல்களைச் சார்ந்தவையே. )என நபி(ஸல்)அவர்கள் எனக்குக் கூறினார்கள்.

முஸ்லிம்: அபூதர்(ரலி).

(முஃமின்களே!) நரகை பயந்து கொள்ளுங்கள்! ஒரு பேரீத்தம் பழத்துண்டை (தர்மம் செய்வது)கொண்டாகிலும் சரியே. அதுவும் இல்லையென்றால், இனிமையான வார்த்தையைக் கூறுவது

கொண்டாகிலும் (நரகை விட்டு பாதுகாப்பு தேடிக் கொள்ளுங்கள்) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். புகாரி, முஸ்லிம்: அதீ பின் ஹாதம் (ரலி).

மணமான வார்த்தையாகிறது தர்மமாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

## உண்பது பருகுவதில் ஒழுக்கம்

2:168 மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில், அனுமதிக்கப்பட்டவற்றையும், பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள் ஷைத்தானின் அடிச்சுவடுகளை பின்பற்றாதீர்கள் - நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவனாவான்.

17:27 நிச்சயமாக விரயஞ் செய்பவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாவார்கள் ஷைத்தானோ தன்னுடைய இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கின்றான்.

இடதுகரத்தால் நீங்கள் சாப்பிடாதீர்கள். நிச்சயமாக ஷைத்தான் இடது கரத்தால் சாப்பிடுகிறான். இடது கரத்தால் குடிக்கிறான். முஸ்லிம்: ஜாபிர் (ரலி).

நிச்சயமாக உங்களில் ஒருவர் தம் இடது கரத்தால் சாப்பிடவேண்டாம். மேலும் இடது கரத்தால் அவர் பருகவும் வேண்டாம். நிச்சயமாக, ஷைத்தான் தன் இடது கரத்தால் உண்ணவும், பருகவும் செய்கிறான். முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி).

நான் நபி (ஸல்) அவர்களின் பொறுப்பில் வளர்ந்துவரும் சிறுவனாக இருந்தேன். (ஒரு தடவை) உணவுத் தட்டில் என் கை இங்குமங்கும் சுற்றிக்கொண்டிருந்தது. (அதைப் பார்த்த) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எனக்கு கூறினார்கள், சிறுவரே! அல்லாஹ்வின் பெயர் (பிஸ்மில்லாஹ்) கூறி உண்ணுவாயாக! உன் வலது கையால் உண்ணுவாயாக! (உணவுத் தட்டில்) உனக்கு அருகிலுள்ள பகுதியிலிருந்து உண்ணுவாயாக! எனக் கூறினார்கள். புகாரி, முஸ்லிம்: அம்ரு பின் அபீஸலமா (ரலி).

## நல்லதைப் பேசுதல் (நாகாக்க)

4:148 அநியாயம் செய்யப்பட்டவர்களைத் தவிர (வேறு யாரும்) வார்த்தைகளில் தீயவற்றை பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்பவில்லை - அல்லாஹ் நன்கு செவியுறுவோனாகவும் யாவற்றையும் அறிபவனாகவும் இருக்கின்றான்.

17:53 (நபியே!) என் அடியார்களுக்கு அவர்கள் அழகியதையே சொல்ல வேண்டும் என்று கூறுவீராக! நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் (தீயதைத் தூண்டி) விஷமஞ் செய்வான் நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான பகைவனாக இருக்கின்றான்.

அல்லாஹ்வைக் கொண்டும், மறுமை நாளைக் கொண்டும், ஈமான் கொண்டவர், நன்மையையே பேசட்டும் அல்லது வாய் மூடி இருக்கட்டும். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

நிச்சயமாக அடியான் சில நேரங்களில் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்குறிய விஷயங்களை, அதன் முக்கியத்துவத்தை உணராமலேயே கூறுகிறான். (எனினும்) அல்லாஹ், அதற்காக அவன் அந்தஸ்துகளை உயர்த்துகிறான். நிச்சயமாக அடியான் சிலவேளைகளில் அல்லாஹ்வின்

கோபத்திற்குரிய விஷயங்களை-அதன் தீங்குகளை உணராமலேயே பேசிவிடுகிறான். அதன் காரணமாக அவன் நரகில் வீழ்கிறான். புகாரி: அபூஹுரைரா (ரலி).

யார் தன் இரு தாடை எலும்புகளுக்கு மத்தியில் உள்ளதையும் (நாவையும்) இரு கால்களுக்கு மத்தியில் உள்ளதையும் (மர்மஸ்தானத்தையும்)பாதுகாத்துக் கொள்கிறாரோ, அவருக்கு சொர்க்கம் கிடைக்க நான் பொறுப்பேற்கிறேன். புகாரி, முஸ்லிம்: ஸஹ்ல் பின் ஸஃது (ரலி).

## பிற உயிர்களிடம் பரிவு

---

16:66 நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளிலும் (தக்க) படிப்பினை இருக்கின்றது அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்.

ஒரு பூனையை அது மரணமடையும் வரை சிறைவைத்திருந்த ஒரு பெண் நரகில் வேதனை செய்யப்படுவாள். அப்பூனைக்கு அவள் உணவளிக்கவுமில்லை, தண்ணீர் புகட்டவுமில்லை, அவள் அதனை அவிழ்த்து விடுபவளாகவுமில்லை. அவள் அதை அவிழ்த்து விட்டிருந்தால் பூமியின் புழு, பூச்சிகளையாவது அது தின்றிருக்கும். புகாரி,முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி).

கால்நடைகளை (உணவு, தண்ணீர் கொடுக்காமல்)கட்டிப் போடுவதை அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். முஸ்லிம்: அபு அலி சவீதிப்னு முகர்ரனின் (ரலி).

நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஒரு பிரயாணத்திலிருந்தோம் அப்பொழுது நபி(ஸல்)அவர்கள் தங்கள் (மல ஜலத்)தேவைக்காகச் சென்றார்கள் அப்பொழுது நாங்கள் ஒரு சிவப்பு நிறப்பறவையைப் பார்த்தோம். அப்பறவையுடன் அதன் இரு குஞ்சுகளும் இருந்தன. இவ்விரு குஞ்சுகளையும் நாங்கள் கையில் எடுத்தோம். அப்பொழுது அதன் தாய்ச் செம்பறவை வந்தது அங்கு தன் குஞ்சுகளைக் காணாததால் (திடுக்கிட்டு) தன் இறக்கையை தரையில் விரித்தது. இதற்கிடையே நபி(ஸல்) அவர்கள் (தங்கள் தேவையை முடித்து விட்டு) அங்கு வந்தார்கள். உடனே யார் இப்பறவையின் குஞ்சுகளைப் பிடித்து அதனை பரிதவிக்கச் செய்தவர்? உடனே அதன் குஞ்சுகளை அதனிடம் திரும்ப ஒப்படையுங்கள் எனக் கூறினார்கள். ஒரு முறை ஒரு எறும்பின் கிராமத்தை (எறும்புப் புற்றுகளை) நாங்கள் எரித்து விட்டோம் அதைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள் நெருப்பின் அதிபதியாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் நெருப்பைக் கொண்டு எந்த உயிருள்ளவைகளையும் வேதனை செய்வது கூடாது என எடுத்துக் கூறினார்கள். ஸஹீஹான அறிவிப்பாளர் தொடரைக் கொண்டு இமாம் அபூதாவூது இந்த ஹதீஸை அறிவிக்கிறார்கள். அபூதாவூது: அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி).

## மென்மை (இனியசொல் கூறுதல்)

---

3:134 (பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள் மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள் (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான்.

நிச்சயமாக மென்மை எவ்விஷயத்தில் இடம் பெறுகிறதோ, அது அவ்விஷயத்தை அலங்கரித்து விடுகிறது. மென்மை விஷயத்தை விட்டு நீக்கப்படுகிறதோ அது அவ்விஷயத்தைப் பங்கப்படுத்தி விடுகிறது. முஸ்லிம்: ஆயிஷா (ரலி).

மஸ்ஜிதில் ஒரு காட்டரபி சிறு நீர் கழித்து விட்டார். உடனே அவரைத் தாக்குவதற்காக மக்கள் எழுந்தார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவரை விட்டு விடுங்கள்! அவரது சிறுநீரின் மீது ஒரு வாளி தண்ணீரை ஊற்றி விடுங்கள்! நீங்கள் அனுப்பப்பட்டதெல்லாம், மென்மையாக நடந்து கொள்வதற்காகத் தான். கடுமையாக நடந்து கொள்வதற்கு அல்ல எனப் பகர்ந்தார்கள். புகாரி: அபூஹுரைரா (ரலி).

மென்மையை யார் இழந்து விடுகிறாரோ அவர் அனைத்து நன்மைகளையும் இழந்து விடுவார் என நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவிமடுத்துள்ளேன். முஸ்லிம்: ஜரீர் பின் அப்தில்லாஹ் (ரலி).

## அருள் மறையை (குர்ஆன்) ஓதுதல்.

---

54:17 நிச்சயமாக, இக் குர்ஆனை நன்கு நினைவு படுத்திக் கொள்ளும் பொருட்டே எளிதாக்கி வைத்திருக்கின்றோம். எனவே (இதிலிருந்து) நல்லுணர்வு பெறுவோர் உண்டா?

15:9 நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம் நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.

47:24 மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்கள் (இருக்கின்றனவே) அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா?

4:82 அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா, (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்.

நீங்கள் குர்ஆனை ஓதுங்கள்! நிச்சயமாக குர்ஆன் கியாமத் நாளில் தன் தோழர்களுக்கு பரிந்துரை செய்யக் கூடியதாக வரும் என நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவிமடுத்துள்ளேன். முஸ்லிம்: அபூ உமாமா (ரலி).

உங்களில் சிறந்தவர், குர்ஆனைக் கற்றுக் கொண்டு பிறருக்கும் கற்றுத் தருபவர் ஆவார். புகாரி: உஸ்மான் பின் அப்பான் (ரலி).

குர்ஆனைத் திறமையாக நன்முறையில் ஓதுபவர் நல்லோர்களான சங்கை மிகு மலக்குகளுடன் சுவர்க்கத்தில் இருப்பர். குர்ஆனை (இயலாமையால்) கஷ்டப்பட்டவராகத் திக்கித் திக்கி ஓதுகிறவருக்கு இரண்டு நற்கூலிகள் உண்டு. புகாரி, முஸ்லிம்: ஆயிஷா (ரலி).

நிச்சயமாக அல்லாஹ் இந்தக் குர்ஆனைக் கொண்டு எத்தனையோ கூட்டத்தாரின் அந்தஸ்த்துகளை உயர்த்துகிறான். இந்தக் குர்ஆனைக் கொண்டு (அதனை உதாசீனப் படுத்தும்) எத்தனையோ கூட்டத்தாரைத் தாழ்த்துகிறான். முஸ்லிம்: உமர் பின் கத்தாப் (ரலி).

அல்லாஹ்வின் அருள்மறையான திருக்குர்ஆனிலிருந்து ஓர் எழுத்தை ஒருவர் ஓதுவாரானால், அவருக்கு ஒரு நன்மை உண்டு. அந்த நன்மை பத்து மடங்கு கொண்டதாகும். அலிப், லாம், மீம் ஓர் எழுத்து என்று நான் கூறமாட்டேன். மாறாக அலிப் ஒரு எழுத்தாகும், லாம் ஓர் எழுத்தாகும், மீம் ஓர் எழுத்தாகும். (மூன்றும் மூன்று எழுத்துகளாகும். அம்மூன்றையும் ஒருவர் ஓதினால் ஒவ்வொன்றுக்கும் பத்து நன்மைகள் வீதம் முப்பது நன்மைகளைப் பெறுவார்) திர்மிதி: அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி).

## கல்வி கற்க ஆர்வம்

20:114 ஆகவே, உண்மை அரசனாகிய அல்லாஹ்வே மிக உயர்ந்தவன் இன்னும் (நபியே!) உமக்கு (குர்ஆனின்) வஹீ அறிவிக்கப்பட்டு அது முடிவதற்கு முன்னதாகவே குர்ஆனை ஓத நீர் அவசரப்படாதீர் "இறைவா! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக!" என்றும் நீர் பிரார்த்தனை செய்வீராக!

58:11ஈ மான் கொண்டவர்களே! சபைகளில் "நகர்ந்து இடங்கொடுங்கள்" என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால், நகர்ந்து இடம் கொடுங்கள் அல்லாஹ் உங்களுக்கு இடங்கொடுப்பான் தவிர, 'எழுந்திருங்கள்' என்று கூறப்பட்டால், உடனே எழுந்திருங்கள் அன்றியும், உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும் கல்வி ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான். அல்லாஹ்வோ நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

ஆதமின் மகன் மரணித்துவிட்டால் மூன்றைத் தவிர அவனின் அமல்கள் (அனைத்தும்)துண்டித்து விடும்(தொடர்ந்து நன்மை தரக்கூடிய மூன்று அமல்களாகிறது) 1. ஸதகத்துன் ஜாரியா- தொடர்ந்து நடைபெற்று வரும் தர்மம் 2.பயன் வழங்கும் கல்வி 3. அவருக்காக துஆச் செய்யும் அவரின் நல்லபிள்ளை. முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

யார் அறிவு ஞானத்தைத் தேடும் பாதையில் நடக்கிறாரோ அல்லாஹ் அவருக்கு சுவனத்தின் பாதையை இலேசாக்கி வைக்கிறான். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

அடியான் தன் ஆயுளை எவ்வாறு செலவழித்தான் என்றும், அவன் தன் கல்வியை எதில் செயல்படுத்தினான் என்றும், அவன் தன் செல்வத்தை எங்கிருந்து சம்பாதித்தான்,எதில் செலவழித்தான் என்றும், அவன் தன் உடலை எதில் பயன்படுத்தினான் என்றும் அவனிடம் விசாரிக்கப்படாதவரை அவனின் இரு பாதங்களும் (மறுமை நாளில் அவன் நிற்கும் இடத்தை விட்டு சிறிதளவும்)நகர முடியாது. திர்மிதி: அபூபர்ஜா நழ்லா பின் உபைதில் அஸ்லமி(ரலி).

## நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்

3:104 மேலும், (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாகவும், நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும் - இன்னும் அவர்களே வெற்றி பெற்றோராவர்.

3:110 மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள் இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள் வேதத்தையுடையோரும் (உங்களைப் போனறே) நம்பிக்கை கொண்டிருப்பின், (அது) அவர்களுக்கு நன்மையாகும் - அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர் எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர்.

உங்களில் ஒருவர் தீமையைப் பார்த்தால் அதனை அவர் தம் கரத்தால் தடுக்கட்டும்: அவர் அதற்குச் சக்தி பெறாவிட்டால்,தம் நாவால் தடுக்கட்டும், அவர் அதற்கும் சக்தி பெறாவிட்டால் தம் உள்ளத்தால்

அதனை வெறுக்கட்டும். இதுவே ஈமானின் மிக பலவீனமான நிலையாகும். முஸ்லிம்: அபூ ஸயீதில் குத்ரீ (ரலி).

என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் (அல்லாஹ்) மீது ஆணையாக, நீங்கள் நன்மையை ஏவி வர வேண்டும்! தீமையைத் தடுத்து வரவேண்டும்! இல்லையெனில் அல்லாஹ் உங்கள் மீது தனது வேதனையை இறக்கி வைக்கக் கூடும். பின்னர் நீங்கள் அவனை (துஆவின் மூலம்) அழைப்பீர்கள், (ஆனால்) உங்களது துஆ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. திர்மிதி: ஹுதைபா (ரலி).

ஜிஹாத்களில் மிக மேன்மையானது அநியாயக்கார அரசனிடம் சத்தியத்தை எடுத்துரைப்பதாகும். அபூதாவூது, திர்மிதி: அபூ ஸயீதில் குத்ரீ (ரலி).

## இரக்கம் காட்டுதல் கிருபை

5:32 இதன் காரணமாகவே, "நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை (த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான் மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள் இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்.

முஃமின்கள், ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதிலும், கிருபை காட்டுவதிலும், இரக்கம் காண்பிப்பதிலும் ஒரே உடல் போன்றவர்கள். அவ் உடலில் எதாவதொரு உறுப்பு (நோயைக் கொண்டு) முறையிட்டால் அதற்காக மற்ற உறுப்புக்கள் விழித்திருப்பது கொண்டும் காய்ச்சலைக் கொண்டும் வருத்திக்கொள்கின்றன. புகாரி, முஸ்லிம்: நுஃமான் பின் பஷீர் (ரலி).

காட்டரபிகளில் சிலர் அண்ணல நபி (ஸல்) அவர்கள் சமூகத்திற்கு வந்திருந்தார்கள். அப்பொழுது அவர்கள் அண்ணலாரிடம் உங்கள் குழந்தைகளை நீங்கள் முத்தமிடுகிறீர்களா? என (ஆச்சரியத்துடன்) வினவினார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆம், என பதிலளித்தார்கள். அதற்கு அக்காட்டரபிகள் என்றாலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக நாங்கள் முத்தமிட மாட்டோம் என்றார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் உங்கள் இதயங்களிலிருந்து கிருபை (இரக்கம், அன்பு) காட்டுவதை நீக்கிவிட்டால் நான் என்ன செய்யமுடியும் என்றார்கள். புகாரி, முஸ்லிம்: ஆயிஷா (ரலி).

யார் நம் சிறுவர் மீது இரக்கம் காட்டவில்லையோ, நம் பெரியவரின் சிறப்பை அறியவில்லையோ அவர் நம்மைச் சேர்ந்தவரல்லர். அபூதாவூது, திர்மிதி: அம்ரு பின் ஷுஐப் தம் தந்தை ஷுஐப் வாயிலாகவும் அவர் தம் பாட்டனார் அம்ருபின் ஆஸ் (ரலி).

## சமாதானம் பரிந்துரை

4:85 எவரேனும் ஒரு நன்மையான காரியத்திற்கு சிபாரிச செய்தால் அதில் ஒரு பாகம் அவருக்கு உண்டு. (அவ்வாறே) எவரேனும் ஒரு தீய காரியத்திற்கு சிபாரிசு செய்தால், அதிலிருந்து அவருக்கும் ஒரு பாகமுண்டு. அல்லாஹ் எல்லா பொருட்களையும் கண்காணிப்பவனாக இருக்கின்றான்.

49:10 நிச்சயமாக மு.ஃமின்கள் (யாவரும்) சகோரர்களே ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானம் உண்டாக்குங்கள் இன்னும் உங்கள் மீது கிருபை செய்யப்படும் பொருட்டு, நீங்கள் அல்லாஹ்வை அஞ்சங்கள்.

மனிதர்களுக்கு மத்தியில் சமாதானம் செய்து வைத்து (அப்பொழுது)ஒரு நன்மையான விஷயத்தை எத்திவைத்தாரோ அல்லது ஒரு நன்மையானதைச் சொன்னாரோ அவர் பொய்யராக மாட்டார் என நபி(ஸல்)அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். புகாரி, முஸ்லிம்: உம்மு குல்தூம் பின்து உக்பா பின் அபீ முஅய்த்(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்களிடம் தேவையுடையவர் வந்தால், தங்களுடன் அமர்ந்துள்ள தங்களருமைத் தோழர்களை முன்னோக்கிக் கூறுவார்கள். (தோழர்களே!)நீங்கள் சிபாரிசு செய்யுங்கள், நற்கூலி வழங்கப்படுவீர்கள். அல்லாஹ் தன் நபியின் நாவின் மீது அவன் விரும்புவதை முடிவ செய்வான். புகாரி, முஸ்லிம்: அபூ மூஸா அல் அஷ்அரீ(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்கள் அருகே ஒரு மனிதர் நடந்து சென்றார். அப்பொழுது தங்களது சமூகத்தில் அமர்ந்திருந்த ஒரு மனிதரிடம் இவரது விஷயத்தில் உமது கருத்தென்ன? என நபி(ஸல்)அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது அவர், இவர் மென்மையான மனிதர்களில் நின்றுமுள்ளவர். இவர் பெண் கேட்டால் (பெண் கொடுத்து) மணம் முடித்து வைக்கப்படுவதற்கும், இவர் பரிந்துரை செய்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் தகுதி மிக்கவர் எனக் கூறினார். இதனைக் கேட்ட அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். பிறகு மற்றொரு மனிதர் அங்கு நடந்து சென்றார். அப்பொழுது அவரிடம் அண்ணல் நபி(ஸல்) அவர்கள், இவரது விஷயத்தில் உமது கருத்தென்ன? எனக்கேட்டார்கள். அதற்கவர், அல்லாஹ்வின் திருத்தூதரே! இவர் ஏழை முஸ்லிம்களில் ஒருவர், இவர் பெண்கெட்டால் (பெண்கொடுத்து) மணமுடிக்கப் படாமலிருப்பதற்கும், இவர் பரிந்துரை செய்தால் ஏற்றுக்கொள்ளப் படாமலிருப்பதற்கும், இவர் பேசினால் செவிசாய்க்கப்படாமலிருப்பதற்கும் உரியவர் என்று கூறினார். அப்பொழுது அண்ணல் நபி(ஸல்) அவர்கள், அவர் (முந்தியவரைப்) போன்றவர்களால் பூமி நிரம்புவதைவிட இவர்(இரண்டாமவர்) சிறந்தவராவார் எனப் பகர்ந்தார்கள். புகாரி, முஸ்லிம்: அபுல் அப்பாஸ் ஸஹ்ல் பின் ஸஃதிஸ் ஸாயிதி(ரலி).

ஒரு ஆண் தன் மனைவியை திருப்திப் படுத்துவதற்காகவும், போர்க்காலத்திலும், மக்களிடையே நல்லிணக்கம்(சமாதானம்) ஏற்படுத்துவதற்காகவும், ஆகிய மூன்று காரியங்களுக்காகத் தவிர வேறு எதிலும் பொய் சொல்ல அனுமதியில்லை. என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். திர்மிதி : அஸ்மா பின்த் யஸீத்(ரலி).

## அமானிதம் பேணுதல்

---

4:58 நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்புவித்து விடவேண்டுமென்றும், மனிதர்களிடையே தீர்ப்பு கூறினால் நியாயமாகவே தீர்ப்புக் கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான் நிச்சயமாக அல்லாஹ்

உங்களுக்கு (இதில்) மிகவும் சிறந்த உபதேசம் செய்கிறான் நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான்.

(உங்களில்) எவரொருவர் தம் பிற சகோதரருக்கு கண்ணியத்தாலோ அல்லது வேறு பொருளாலோ அநீதி இழைத்திருந்தால் எந்தத் தங்க நாணயமும், வெள்ளி நாணயமும் இல்லாமல் போகுமுன் (கியாமத் நாள் வருவதற்கு முன்) அவர் இன்றே அவரிடம் அதனை ஹலாலாகக் (ஆகுமாக்க)த் தேடிக் கொள்ளட்டும். (அவரது கண்ணியத்தைக் குலைத்திருந்தால் அதற்கு அவரிடம் மன்னிப்புக் கோரி ஹலால் தேடிக் கொள்ளட்டும். அவரது பொருளை அபகரித்திருந்தால்,அதனை அவரிடம் ஒப்படைத்தோ அல்லது அது இல்லாவிட்டால் அவரிடம் மன்னிப்புக் கேட்டோ அவரிடம் ஹலால் தேடிக் கொள்ளட்டும்)

(ஏனெனில் கியாமத் நாளில்)அவரிடம் நல் அமல்கள் இருந்தால் அவரது அநியாயத்தின் அளவு அவரிடமிருந்து(பறித்து)எடுத்துக் கொள்ளப்படும். அவரிடம் நன்மைகள் இல்லையென்றால், அவரால் அநீதி இழைக்கப்பட்டவருடைய பாவங்களை எடுத்து அவரின் மீது சுமத்தப்படும். புகாரி: அபூஹுரைரா(ரலி).

யார் ஒரு முஸ்லிமின் உரிமையைத் தம் வலது கரத்தில் எடுத்துக்கொள்கிறாரோ, அவர் மீது அல்லாஹ் நரகை வாஜிபாக்கி (அவசியமாக்கி) வைத்து விட்டான். அவர் மீது சுவர்க்கத்தை ஹராமானதாக (விலக்கப்பட்டதாக) ஆக்கி வைத்து விட்டான். என அண்ணல் நபி(ஸல்) அவர்கள் பகர்ந்தார்கள். அப்பொழுது ஒரு மனிதர் (அவ்வுரிமை)சிறு பொருளாக இருந்த போதிலுமா? என்று கேட்டார். அதற்க அண்ணல் நபி(ஸல்)அவர்கள் ஆம் ஒரு அராக் முள் மரக்குச்சியாக இருந்த போதிலும் சரியே என மறு மொழிப் பகர்ந்தார்கள். முஸ்லிம்: அபூ உமாமா இயாஸ் பின் தஃலபா ஹாரிஸி(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: நானும் மனிதன் தான். நிச்சயமாக நீங்கள் என்னிடம் வழக்குகளைக் கொண்டு வருகிறீர்கள். உங்களில் சிலர் தம் ஆதாரத்தைக் கொண்டு மற்ற சிலரை விட மிக அழகாக எடுத்துரைப்பவராக இருப்பார். நான் கேட்பதை வைத்து அவருக்கு சாதகமாக நான் தீர்ப்பளித்து விடுவேன்.(எனினும்) ஒருவருக்கு அவருடைய சகோதரருடைய உரிமையை நான் சாதகமாக தீர்ப்பளித்து விட்டால், அவருக்கு நான் பங்கிட்டு அளிப்பதெல்லாம் நரக நெருப்பில் நின்றும் ஒரு துண்டைத்தான். புகாரி, முஸ்லிம்: உம்மு ஸலமா(ரலி).

## பெற்றோர் நலம் பேணுதல்

31:14 நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வஸிய்யத்துச் செய்(து போதித்)தோம் அவனுடைய தாய் பலஹீனத்தின் மேல் பலஹீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள் இன்னும் அவனுக்குப் பால் குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன ஆகவே "நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது."

நான் நபி(ஸல்) அவர்களிடம் எந்த அமல் அல்லாஹ்வுக்கு பிரியமானது? என்று கேட்டேன். அதற்கவர்கள் தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதாகும் எனப் பகர்ந்தார்கள். பின்னர் எது? என நான் வினவ, பொற்றோருக்கு நன்மை செய்தல் என அவர்கள் பகர்ந்தார்கள். பின்னர் எது? என நான் வினவ, அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்வதாகும் எனப் பகர்ந்தார்கள். புகாரி,முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் மஸ்வூது(ரலி).

வயது முதிர்ந்த தன் பெற்றோர் இருவரையோ அல்லது ஒருவரையோ பெற்றிருந்தும் சுவனம் செல்லாமல் போய்விட்ட மனிதன் நாசமடைவானாக! பின்னர் நாசமடைவானாக! பின்னர் நாசமடைவானாக! முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

ஒரு மனிதர் அண்ணல் நபி(ஸல்)அவர்கள் சமூகத்திற்கு வந்து, அல்லாஹ்வின் திருத்தூதரே! என் அழகிய தோழமைக்கு மக்களில் அதிக உரிமைப் பெற்றவர் யார்? என வினவினார். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் உம் தாய் எனப் பகர்ந்தார்கள். பின்னர் யார்? என அவர் வினவினார் அதற்கவர்கள் உம் தாய் என்றார்கள். பின்னர் யார் என வினவினார். அப்பொழுது உம் தாய் என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர்? யார் என்றார். அப்பொழுது உம் தந்தை என அண்ணல் நபி(ஸல்)அவர்கள் பகர்ந்தார்கள். புகாரி,முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

## உறவினர்களைச் சேர்த்துக் கொள்தல்(அனுசரித்தல்)

4:1 மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள் அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள் மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

ஒரு மனிதர் நபி(ஸல்)அவர்களிடம் என்னைச் சுவர்க்கத்தில் நுழையச் செய்யும் ஓர் அமலை எனக்கு அறிவித்துத் தருவீர்களாக என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் நீர் அல்லாஹ்வை வணங்குவீராக! அவனுக்கு எப்பொருளையும் இணைவைக்காதீர்! நீர் ஜவேளைத் தொழுகையை நிறைவேற்றுவீராக! ஜகாத்தைக் கொடுப்பீராக! உற்றார் உறவினரை ஆதரிப்பீராக!(நீர் சுவனம் புகுவீர்)எனப் பதிலளித்தார்கள். புகாரி, முஸ்லிம்: அபூ அய்யூப் (ரலி).

யார் தம் ரிஜ்கிலும்(இரணத்திலும்)ஆயுளிலும் அதிகரிக்கப்பட விரும்புகிறாரோ அவர் தம் உறவினரைச் சேர்த்துக்கொள்ளட்டும். புகாரி,முஸ்லிம்: அனஸ்(ரலி).

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தாளியைக் கண்ணியப்படுத்தட்டும்! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர் தம் உறவினரைச் சேர்த்துக்கொள்ளட்டும்! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர் நல்லதைப் பேசட்டும்! அல்லது வாய் மூடி இருக்கட்டும்! புகாரி,முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

## பிறரின் குறையை மறைத்தல்

24:19 எவர்கள் ஈமான் கொண்டுள்ளோரிடையே இத்தகைய மானக்கேடான விஷயங்கள் பரவ வேண்டுமெனப் பிரியப்படுகிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் நோவினை செய்யும் வேதனையுண்டு அல்லாஹ் (யாவற்றையும்) அறிகிறான். நீங்கள் அறியமாட்டீர்கள்.

உலகில் எந்த ஓர் அடியான் மற்றொரு அடியானின் குறைகளை மறைக்கின்றானோ கியாமத் நாளில் அவன் குறைகளை அல்லாஹு தஆலா மறைப்பான். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

எவரொருவர் ஒரு முஸ்லிமின் கஷ்டங்களில் ஒரு கஷ்டத்தைப் போக்கி வைக்கிறாரோ, அவருக்கு அல்லாஹ் கியாமத் நாளின் கஷ்டங்களில் ஒரு கஷ்டத்தைப் போக்கி வைப்பான். யார் கஷ்டப்படக் கூடியவருக்கு (அவரது கஷ்டத்தை)லேசாக்கி வைக்கிறாரோ, அவரது குறையை உலகிலும், மறுமையிலும் அல்லாஹ் மறைப்பான். ஓர் அடியான் தன் சகோதரனுக்கு உதவி கொண்டிருக்கும் காலமெல்லாம் அல்லாஹ்வும் அவ்வடியானுக்கு உதவி செய்துகொண்டிருக்கிறான்.

யார் கல்வியைத் தேடும் பாதையில் நடந்து செல்கிறாரோ அவருக்கு சுவனத்தின் பாதையை அல்லாஹ் இலேசாக்கி வைப்பான். எந்தக் கூட்டத்தினர் அல்லாஹ்வின் வீடுகளில் நின்றும் ஒரு வீட்டில் (மஸ்ஜிதில்) கூடி அல்லாஹ்வின் திரு வேதத்தை (குர்ஆனை) ஓதுவதிலும், அதனை தங்களுக்கு மத்தியில் ஒருவருக்கொருவர் கற்றுக்கொடுத்துக் கொள்வதிலும் ஈடுபடுகிறார்களோ அவர்கள் மீது ஸகீனா என்னும் நிம்மதி இறங்கும். அல்லாஹ்வின் அருட்கொடைகள் அவர்களை மூடிக் கொள்ளும். மலக்குகள் அவர்களை சூழ்ந்துக் கொள்வார்கள். அல்லாஹ் தன்னிடமுள்ளவர்களிடம் (மலக்குகளிடம்) அவர்களைப் புகழ்ந்துரைப்பான். யாரை அவர் அமல்கள் பிந்தச் செய்து விடுகின்றதோ (நல் அமல்கள் அதிகம் செய்யாமல் பொழுதுபோக்காக இருந்து விடுகிறாரோ) அவரை அவரது வம்சச் சிறப்பு நற்பதவிகளின் பக்கம் முன்னேற்றச் செய்யாது. முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

## பெண்கள் நலம் நாடுதல்.

4:129 (முஃமின்களே!) நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், மனைவியரிடையே நீங்கள் நீதம் செலுத்த சாத்தியமாகாது ஆனால் (ஒரே மனைவியின் பக்கம்) முற்றிலும் சாய்ந்து மற்றவளை அந்தரத்தில் தொங்க விடப்பட்டவள் போன்று ஆக்கிவிடாதீர்கள் நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயந்து சமாதானமாக நடந்து கொள்வீர்களானால், நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றான்.

பெண்களுக்கு நலவை நாடுங்கள்! நிச்சயமாக பெண், விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டாள். விலா எலும்புகளின் மேல்பகுதி, மற்றவைகளை விட மிக வளைவாக உள்ளது. அந்த எலும்பை நேராக்க நீர் முயன்றால் அதனை முறித்து விடுவீர்! அதனை அப்படியே விட்டு விடுவீரானால் அது வளைவாகவே இருக்கும். (ஆகவே நடுநிலையைக் கடை பிடியுங்கள்!) பெண்களுக்கு நலம் நாடுங்கள். புகாரி,முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

ஒரு முஃமினான ஆண்(கணவன்)ஒரு முஃமினான பெண்ணை(அவன் மனைவியை)வெறுக்க வேண்டாம். அவன் அவளிடம் ஒரு குணத்தை வெறுத்தால் அவளிடமுள்ள வேறொரு (நற்)குணத்தைக் கொண்டு பொருந்திக் கொள்வானாக! முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

நான் அண்ணல் நபி(ஸல்)அவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவரின் மனைவிக்கு அவள் கணவனிடம் என்ன உரிமை உள்ளது எனக் கேட்டேன். அதற்கு அண்ணல் நபி(ஸல்)அவர்கள், (உம்மிடம் உம் மனைவிக்குரிய உரிமையாகிறது) நீர் உணவு உண்டால், அவளையும் உண்ணச் செய்வதும், நீர் உடுத்தினால், அவளையும் உடுத்தச் செய்வதுமாகும். அவளது முகத்தில் அடிக்காதீர்! அவளைப் பழிக்காதீர் (மனவேறுபாடு ஏற்படின்) இல்லத்திலே (படுக்கையிலே) தவிர அவளை வெறுக்காதீர்! எனப் பகர்ந்தார்கள். அபூதாவூது: முஅவியா பின் ஹைதா(ரலி).

முஃமின்களில்ஈ மானால் பரிபூரணமானவர், அவர்களில் குணத்தால் மிக அழகானவரே! உங்களிற் சிறந்தவர், உங்கள் மனைவியரிடம் சிறந்தவர்களே.

நற்குணம் என்பது நல்லவைகளைச் செய்வதும், பிறருக்கு வேதனை தருவதை விட்டுத் தவிர்ந்துக் கொள்வதும், முகமலர்ச்சியோடு இருப்பதுமாகும். உங்களில் நற்குணமுடையவரே எனக்கு மிகப் பிரியமானவர். என ஒரு மணிமொழியில் மாநபி(ஸல்) கூறியுள்ளார்கள். புகாரி: அபூஹுரைரா(ரலி).

## சுத்தம் என்றும் சுகம் தரும் (ஒளு)

5:6 முஃமின்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாராகும்போது, (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள் உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி (மஸஹு செய்து) கொள்ளுங்கள் உங்கள் கால்களை இரு கனுக்கால் வரை(க் கழுவிக் கொள்ளுங்கள்) - நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப்பட்டோராக) இருந்தால் குளித்து(த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள் தவிர நீங்கள நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மல ஜலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல் உறவு கொண்டி)ருந்தாலும் (உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள் அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள் அல்லாஹ் உங்களை வருந்தக் கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை - ஆனால் அவன் உங்களைத் தூய்மைப் படுத்தவும் இன்னும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, தனது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கவும் விரும்புகிறான்.

ஒளுச் செய்ததின் காரணமாக கியாமந் நாளில் என் உம்மத்தினர் கை, கால், முகம் ஆகிய உறுப்புகள் ஒளி வீசுகின்றவர்களாக அழைக்கப்படுவார்கள். உங்களில் யார் தம் ஒளியை அதிகப்படுத்திக் கொள்ள விரும்புகிறாரோ அவர் அவ்வாறு செய்து கொள்ளட்டும். புகாரி,முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

ஒரு முறை அண்ணலார் உங்கள் பாவங்களை அழிக்கக்கூடியதும், உங்கள் அந்தஸ்துக்களை உயர்த்தக் கூடியதுமான அமல்களை உங்களுக்கு நான் அறிவித்துத் தரமட்டுமா என தங்கள் தோழர்களிடம் வினவினார்கள். அதற்கு தோழர்கள் ஆம், யாரஸூலல்லாஹ்! எனக் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் (அவை பனி, குளிர்போன்ற) கஷ்டமான நேரத்திலும் ஒளுவை பரிபூரணமாகச் செய்து, மஸ்ஜிதுகளுக்கு அதிகமாக எட்டுகள் எடுத்து வைத்து (நீண்ட தூரமானாலும்) செல்வது, ஒரு தொழுகைக்குப் பின் மறுதொழுகையை எதிர்பார்ப்பது ஆகியவையாகும். அவையே (மனது மற்றும் ஷைத்தானின் தீங்குகளை விட்டும்) பாதுகாப்பாகும். அவையே பாதுகாப்பாகும் எனப் பகர்ந்தார்கள். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

மிஸ்வாக் செய்வது, வாயைச் சுத்தப்படுத்தக் கூடியதாகவும், ரப்பை திருப்திப் படுத்தக்கூடியதாகவும் விளங்குகிறது. அந்நஸயீ, இப்னு ஹுஜைமா(ரலி).

## வியாபாரத்தில் நேர்மையை கடைபிடித்தல்.

11:85 (என்) சமூகத்தவர்களே! அளவையிலும் நிறுவையிலும், நீதியைக் கொண்டு நீங்கள் பூர்த்தி செய்யுங்கள். (மக்களுக்குக் கொடுக்க வேண்டிய) அவர்களுடைய பொருட்களைக் குறைத்து விடாதீர்கள். பூமியில் விஷமம் செய்துகொண்டு (வரம்பு மீறி) அலையாதீர்கள்.

83:1 அளவு (எடையில்) மோசம் செய்பவர்களுக்கு கேடுதான்.

83:2 அவர்களிடம் மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கும் போது நிறைவாக அளந்து வாங்குகின்றனர்.

83:3 ஆனால், அவர்கள் அளந்தோ, நிறுத்தோ கொடுக்கும்போது குறை(த்து நஷ்டமுண்டா)க்குகிறார்கள்.

எவர் நம்மின் மீது ஆயுதங்களைச் சுமந்தாரோ (நம்மைத் தாக்க ஆயுதங்களை எடுத்தாரோ) அவர் நம்மைச் சேர்ந்தவரல்லர். யார் நம்மை ஏமாற்றினாரோ, அவர் நம்மைச் சேர்ந்தவரல்லர். (முஸ்லிம்)

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், நபி(ஸல்) அவர்கள் ஒரு முறை ஓர் தானியக் குவியலருகே நடந்து சென்றார்கள். அப்பொழுது அந்தத் தானியக் குவியலில் நபி(ஸல்) அவர்கள் தங்களின் கையை நுழைத்தார்கள். அவர்கள் விரல்களில் ஈரம்பட்டது. உடனே நபியவர்கள் தானிய வியாபாரியே! இது என்ன? என்றார்கள். அதற்கவர், மழை பெய்ததால் தானியம் ஈரமாகி விட்டது, என்றார். அதற்கு நபி(ஸல்)அவர்கள் மக்கள் பார்க்கும் விதத்தில் அந்த ஈரமான தானியக் குவியலின் மேலே வைக்கக் கூடாதா? யார் நம்மை ஏமாற்றுகிறாரோ, அவர் நம்மைச் சேர்ந்தவரல்லர், என்றார்கள். புகாரி,முஸலிம்: அபூஹுரைரா(ரலி).

ஒரு பொருளை வாங்கும் எண்ணமில்லாமல் (பிறரை எமாற்றுதவற்காக)ஒருவருக்கொருவர் பொருளின் விலையைக் கூட்டி விடாதீர்கள். புகாரி,முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

வியாபாரத்தில் சத்தியம் செய்து விற்பனை சரக்கைச் செல்லுபடியாக்கி விடும், (விற்பனையாக்கி விடும். ஆனால்)சம்பாத்தியத்தை (அபிவிருத்தியை)அழித்துவிடும். புகாரி,முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

## நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து கூறுதல்.

33:56 இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.

யார் என் மீது ஒரு முறை(அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத் என)ஸலவாத் கூறுகிறாரோ, அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் கூறுகிறான்.(தன் அருட்கொடையைப் பொழிகிறான்) முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் அம்ரிப்னில் ஆஸ்(ரலி).

கியாமத் நாளில் என்னிடம் மிக மேலான அந்தஸ்துடையவர், மக்களில் என் மீது அதிகமாக ஸலவாத் கூறுபவர் ஆவார். திர்மிதி: அப்துல்லாஹ் பின் மஸ்வூது(ரலி).

என் மண்ணறையை பெருநாளாகக் கொண்டாடும் இடமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள்! (எனினும்) என் மீது ஸலவாத் கூறுங்கள்! நிச்சயமாக உங்களின் ஸலவாத் (உலகில்)நீங்கள் எங்கிருந்தாலும், என்னை வந்து சேருகிறது. அபூதாவூது: அபூஹுரைரா(ரலி).

ஒரு நாள் நபி(ஸல்)எங்களிடம் வந்தார்கள். அப்பொழுது நாங்கள் யாரஸூலல்லாஹ்! தங்களுக்கு ஸலாம் கூறுவது எவ்வாறு என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். (ஆனால்)தங்கள் மீது ஸலவாத் கூறுவது எவ்வாறு? என்று கேட்டோம் அதற்கு நபி(ஸல்)அவர்கள்,

*“அல்லாஹூம்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீது(ன்)ம் மஜீது, அல்லாஹூம்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா ஆலி இப்ராஹீம, இன்னக ஹமீது(ன்)ம் மஜீத்.”*

பொருள்: இறைவா! நபி இப்றாஹீம்(அலை)அவர்களின் குடும்பத்தினர் மீது நீ கருணை பொழிந்தது போன்று, (எங்கள் நபி) முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் மீதும் கருணைப் பொழிவாயாக! நபி இப்றாஹீம் (அலை)அவர்களின் குடும்பத்தினர் மீது நீ பரகத்துகளை(அபிவிருத்திகளை)அருளியது போல் (எங்கள் நபி) முஹம்மது(ஸல்)அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர் மீதும் பரகத்துகளை (அபிவிருத்திகளை) அருள்வாயாக! நிச்சயமாக நீ புகழப்பட்டவனும், மேலான அந்தஸ்துடையவனுமாகும்- என்று கூறுவீராக! எனப் பகர்ந்தார்கள். புகாரி,முஸ்லிம்: அபூ முஹம்மது கஃபு பின் உஜரா(ரலி).

## அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு கூர்தல்.

---

2:152 ஆகவே, நீங்கள் என்னை நினைவு கூறுங்கள் நானும் உங்களை நினைவு கூறுவேன். இன்னும், நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள் எனக்கு மாறு செய்யாதீர்கள்.

7:205 (நபியே!) நீர் உம் மனதிற்குள் மிக்க பணிவோடும், அச்சத்தோடும் (மெதுவாக) உரத்த சப்தமின்றி காலையிலும், மாலையிலும் உம் இறைவனின் (திருநாமத்தை) திக்ரு செய்து கொண்டு இருப்பீராக! (அவனை) மறந்து விட்டிருப்போரில் ஒருவராக நீர் இருக்க வேண்டாம்.

33:41ஈ மான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமான திக்ரைக் கொண்டு திக்ரு (தியானம்) செய்யுங்கள்.

தம் ரப்பை திக்ரு செய்பவருக்கும், திக்ரு செய்யாதவருக்கும் உதாரணமாகிறது, உயிருள்ளவர், மரணித்தவர் போன்றாகும்.(திக்ரு செய்பவர் உயிருள்ளவர் போன்றாவார். திக்ரு செய்யாதவர் மரணித்தவர் போன்றாவார். புகாரி: அபூ மூஸா அல் அஷ்அரீ(ரலி).

திக்ருகளில் மிக மேலானது லாஇலாஹ இல்லல்லாஹூ என்ற திக்ராகும் என நபி(ஸல்)அவர்கள் கூற நான் செவிமடுத்துள்ளேன். திர்மிதி: ஜாபிர்(ரலி).

ஒரு நபி(ஸல்)அவர்கள், உங்களின் அமல்களில் மிகச் சிறந்ததையும், அவைகளில் உங்கள் எஜமானனிடத்தில் மிகப் பரிசுத்தமானதையும், உங்கள் அந்தஸ்துகளில் மிக உயர்வானதையும், வெள்ளி, தங்கத்தைச் செலவழிப்பதை விட உங்களுக்கு மிகச் சிறந்ததையும், நீங்கள் உங்கள் எதிரிகளைச் சந்தித்து, அவர்களின் கழுத்திலும், அவர்கள் உங்கள் கழுத்திலும் அடித்துக் கொள்வதை (வாளால் வெட்டிக் கொள்வதை) விட மிகச் சிறந்ததையும் உங்களுக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? எனக் கேட்டார்கள். அதற்குத் தோழர்கள் ஆம் (யாரஸூலல்லாஹ்)எனக் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்)அவர்கள் அது தான் அல்லாஹ் தஆலாவின் திக்ராகும் எனப் பகர்ந்தார்கள். திர்மிதி: அபுத்தர்தா(ரலி).

## வணக்க வழிபாடுகளில் நடு நிலை.

2:185 ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு (முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும் எனினும் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருக்கிறாரோ (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பைப்) பின்வரும் நாட்களில் நோற்க வேண்டும் அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்).

அண்ணல் நபி(ஸல்) அவர்களின் வணக்கங்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக (நபித்தோழர்களின்) மூன்று சிறு அணியினர் நபி(ஸல்) அவர்களின் மனைவியரின் இல்லங்களுக்கு வந்தனர். அவர்களுக்கு நபி(ஸல்) அவர்களின் நல்வணக்கங்களைப் பற்றி அறிவித்துக் கொடுக்கப்பட்டதும், தங்கள் செய்து வரும் நல்வணக்கங்களை மிகக் குறைவாகக் கருதினர். முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட மாநபி(ஸல்) அவர்களுடன் நாம் எங்கே (அவர்களின் நல்வணக்கங்களுடன் நம் நல்வணக்கங்கள் எங்கே! என வியப்புடன்) கூறினர். அவர்களில் ஒருவர் கூறினார் (இனிமேல்) நான் இரவு முழுவதும் தொழுகையில் ஈடுபடப் போகிறேன். மற்றொருவர் நான் காலம் முழுவதும் நோன்பு நோற்கப் போகிறேன் என்றார். இன்னொருவர் நான் பெண்களை விட்டும் ஒதுங்கி இருக்கப் போகிறேன். ஒரு போதும் நான் திருமணம் முடிக்க மாட்டேன். (முழுக்க முழுக்க நல் வணக்கங்களிலேயே ஈடுபடப் போகிறேன்) எனக் கூறினார். அப்பொழுது மாநபி(ஸல்)அவர்கள் வந்து நீங்கள் தாம் இவ்வாறு கூறினீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக நான் உங்களில் அல்லாஹ்வை மிக அஞ்சுபவனாகவும் மிக பயப்படுபவனாகவும் உள்ளேன். எனினும் நான் (சில தினங்கள்) நோன்பு நோற்கிறேன், (சில தினங்கள்) நோன்பு நோற்காமலும் இருக்கிறேன். நான் தொழுகையைத் தொழுகிறேன். உறங்கவும் செய்கிறேன். பெண்களை மணமுடித்து இல்லற வாழ்வையும் மேற்கொண்டுள்ளேன். யார் எனது வழி முறையைப் புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சேர்ந்தவரில்லை எனப் பகர்ந்தார்கள். புகாரி, முஸ்லிம்: அனஸ்(ரலி).

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் நுழைந்தார்கள். அப்பொழுது மஸ்ஜிதின் இரண்டு தூண்களுக்கு மத்தியில் ஒரு கயிறு கட்டப்பட்டிருந்தது. அதனை பார்த்த அண்ணல் நபி(ஸல்) அவர்கள், இது என்ன கயிறு? என வினவினார்கள். அதற்கு அத்தோழர்கள், இது ஜைனப் எனும் பெண்மணியின் கயிறாகும் (நபிலான தொழுகைகள்) தொழும் போது சோர்வு ஏற்பட்டுவிட்டால், தம்மை இக்கயிற்றில் கட்டிக் கொண்டு (நின்று) தொழுவார் எனப் பகர்ந்தார்கள். இதனைக் கேட்ட அண்ணல் நபி(ஸல்)அவர்கள் கயிற்றை அவிழ்த்து விடுங்கள்! உங்களில் ஒருவர் தம் சுறுசுறுப்பான நேரத்தில் (நபிலான தொழுகைகளைத்) தொழட்டும்! சொர்வடைந்து விட்டால் அவர் உறங்கி விடட்டும் என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். புகாரி,முஸ்லிம்: அனஸ்(ரலி).

உங்களில் ஒருவருக்கு தொழும் நிலையில் சிறு தூக்கம் வந்து விட்டால் அவர் அத்தூக்கம் போகும் வரை உறங்கவும். ஏனெனில் சிறுதூக்கம் தூங்குபவராக அவர் தொழுதால், அவர் தொழுகையில் பிழை பொறுப்பு இறைஞ்சுகிறாரா?அல்லது தம்மைத் தாம் திட்டிக் கொள்கிறாரா என்பதை அறிய மாட்டார். புகாரி,முஸ்லிம்: ஆயிஷா(ரலி).

## அண்டை வீட்டார் நலம் பேணுதல்

4:36 மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள் அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள் நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை.

அண்டை வீட்டுக்காரரை எங்கு வாரிசாக ஆக்கி விடுவாரோ என்று நான் பயப்படுமளவு அண்டை வீட்டாரின் நலன்களைப் பேணுவதைப் பற்றி ஜிப்ரீல்(அலை) அவர்கள் (தொடர்ந்து) எனக்கு உபதேசம் செய்து கொண்டேயிருந்தார்கள். புகாரி, முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி), ஆயிஷா(ரலி).

அபூதர்ரே, நீர் குழம்பை (சால்னாவை)சமைத்தால் அதில் தண்ணீரை அதிகப் படுத்துவீராக! அதனைக் கொண்டு உம் அண்டை வீட்டுக் காரர்களைக் கவனித்துக் கொள்வீராக! என்று நபி(ஸல்)அவர்கள் எனக்குக் கூறினார்கள். முஸ்லிம்: அபூதர்(ரலி).

மற்றொரு அறிவிப்பில் அபூதர்(ரலி) அறிவிக்கிறார்கள். என் உற்ற நண்பர் அண்ணல் நபி(ஸல்)அவர்கள் எனக்கு உபதேசம் செய்தார்கள். நீர் குழம்பை (சால்னாவை) ஆக்கினால், அதில் தண்ணீரை அதிகப்படுத்துவீராக! பிறகு அண்டை வீட்டாரைக் கவனிப்பீராக! நல்லவிதமாக அதில் நின்றும் அவர்களுக்கு வழங்குவீராக!.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவன் ஈமான் கொண்டவனல்ல, அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவன் ஈமான் கொண்டவனல்ல, அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவன் ஈமான் கொண்டவனல்ல, அப்போது அண்ணல் நபி(ஸல்) அவர்களிடம் யார் ஈமான் கொண்டவனல்ல? என்று வினவப்பட்டது. அதற்கு அண்ணல் நபி(ஸல்) எவனின் தீங்குகளை விட்டும் அண்டை வீட்டார்கள். அச்சம் தீரவில்லையோ அவன் தான் எனப் பகர்ந்தார்கள். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது, (அண்ணலார் கூறினார்கள்) எவனின் தீங்குகளை விட்டும் அண்டை வீட்டுக் காரர்களுக்கு அச்சம் தீர வில்லையோ அவன் சுவர்க்கத்தில் நுழையமாட்டான்.

முஸ்லிம் பெண்களே! எந்தவொரு அண்டை வீட்டுக்காரப் பெண்ணும் மற்றொரு அண்டை வீட்டுக் காரப் பெண்ணை இழிவாகக்கருத வேண்டாம். ஓர் ஆட்டின் குளம்பை கொண்டாயினும் சரியே (ஆட்டுக்காலின் குளம்பை வழங்குவது கொண்டாவது ஒரு பெண் தம் அண்டை வீட்டுக்காரப் பெண்ணைக் கண்ணியப் படுத்தவும்) புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

அண்ணல் நபி(ஸல்) நவின்றதாக அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். மூங்கிலைத் தமது வீட்டுச் சுவற்றில் அண்டை வீட்டுக்காரர் பதித்து வைப்பதைத் தடுக்க வேண்டாம்.

பின்னர் அபூஹுரைரா(ரலி)கூறுகிறார்கள். இந்த (ஸுன்னத்தான) நடைமுறையை புறக்கணிப்பவர்களாக உங்களை நான் பார்க்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அதனை உங்களுக்கு மத்தியில் எடுத்துக் கூறவே செய்வேன். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக் கொண்டவர், தம் அண்டை வீட்டாருக்கு வேதனை தரமாட்டார். அல்லாஹ்வையும்,மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் விருந்தாளியைக் கண்ணியப் படுத்துவார். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர் நல்லதைப் பேசட்டும் அல்லது வாய் மூடி இருக்கட்டும். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

நான் அண்ணல் நபி(ஸல்)அவர்களிடம் யா ரஸூலல்லாஹ்! எனக்கு இரண்டு அண்டை வீட்டுக்காரர்கள் உள்ளனர். அவர்களில் யாருக்கு நான் என் அன்பளிப்பைக் கொடுப்பது என்று கேட்டேன். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவ்விருவரில் யாருடைய தலைவாயில் உனக்கு நெருக்கமாக உள்ளதோ அவருக்கு (அன்பளிப்புச் செய்வாயாக!) எனப் பகர்ந்தார்கள். புகாரி: ஆயிஷா(ரலி).

தம் தோழர்களிடம் சிறந்தவரே அல்லாஹ்விடம் சிறந்தவர் ஆவார். தம் அண்டை வீட்டுக் காரர்களுக்குச் சிறந்தவரே அல்லாஹ்விடம் சிறந்தவர் ஆவார். திர்மிதி: அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி).

## குடும்பத்தார்க்கு செலவு செய்வதின் பயன்

---

2:223 உங்கள் மனைவியர் உங்கள் விளைநிலங்கள் ஆவார்கள் எனவே உங்கள் விருப்பப்படி உங்கள் விளை நிலங்களுக்குச் செல்லுங்கள் உங்கள் ஆத்மாக்களுக்காக முற்கூட்டியே (நற்கருமங்களின் பலனை) அனுப்புங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சங்கள் (மறுமையில்) அவனைச் சந்திக்க வேண்டும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக!

65:7 தக்க வசதியுடையவர்கள், தம் வசதிக்கேற்ப (இவ்விஷயத்தில்) செலவு செய்து கொள்ளவும் ஆனால், எவர் மீது அவருடைய உணவு (வசதி) நெருக்கடியாக்கப் பட்டுள்ளதோ, அவர் தமக்கு அல்லாஹ் கொடுத்ததிலிருந்து செலவு செய்து கொள்ளவும் எந்த ஆத்மாவையும் அல்லாஹ் அதற்குக் கொடுத்திருப்பதேயல்லாமல் (மிகையாக செலவு செய்யும் படி) சிரமப்படுத்த மாட்டான் கஷ்டத்திற்குப் பின்னர், அல்லாஹ் அதி சீக்கரத்தில் இலகுவை (சுகத்தை) உண்டாக்கியருள்வான்.

34:39 "நிச்சயமாக என் இறைவன் தன் அடியார்களில் யாருக்கு நாடுகிறானோ, அவருக்கு செல்வத்தை விசாலப்படுத்துவான் இன்னும் தான் நாடியோருக்கு சுருக்கியும் விடுகிறான் ஆகவே நீங்கள் எந்தப் பொருளை (அல்லாஹ்வின் பாதையில்) செலவு செய்த போதிலும், அவன் அதற்குப் பிரதிபலன் அளிக்கிறான் மேலும், அவன் கொடையாளிகள் அனைவரிலும் மிகவும் மேலானவன்" என்று (நபியே!) நீர் கூறும்.

அல்லாஹ்வின் பாதையில் நீ செலவழித்த ஒரு பொற்காசு, அடிமையை விடுவிப்பதில் நீ செலவழித்த ஒரு பொற்காசு, ஓர் ஏழைக்கு நீ செலவழித்த ஒரு பொற்காசு, உன் குடும்பத்தாருக்கு நீ செலவழித்த ஒரு பொற்காசு ஆகிய (இந்நான்கு) பொற்காசுகளில் மிகப் பெரும் நற்கூலியைப் பெறும் பொற்காசு உன் குடும்பத்தாருக்கு நீ செலவழித்த பொற்காசுதான். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

அபூ அப்தில்லாஹ் தவ்பான் பின் புஜ்துது(ரலி) அறிவிக்கிறார்கள், இவர் அபூ அப்திர்ரஹ்மான் என்று அழைக்கப்படுபவர். இவர் அண்ணல் நபி(ஸல்) அவர்களால் உரிமை விடப்பட்டவர். அவர் அறிவிக்கிறார்:

மனிதன் செலவழிக்கும் பொற்காசுகளில் மிக மேலானவை, தன் குடும்பத்தாருக்கு அவன் செலவழிக்கும் பொற்காசு, அல்லாஹ்வின் பாதையில் உள்ள தன் வாகனத்திற்காக அவன் செலவழிக்கும் பொற்காசு, அல்லாஹ்வின் பாதையில் பாடுபடும் தன் தோழர்களுக்காக அவன் செலவழிக்கும் பொற்காசு ஆகியவையாகும். முஸ்லிம்: அபூ அப்தில்லாஹ் தவ்பான் பின் புஜ்துது(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்களிடம் யா ரஸூ லல்லாஹ்! அபூ ஸலமாவின் பிள்ளைகளுக்கு நான் செலவழிப்பதில் எனக்கு நற்கூலி உண்டா? அவர்களை இவ்வாறாக (உணவைத் தேடி அலைபவர்களாக) நான் விட முடியாது. அவர்கள் என் பிள்ளைகள் (முந்திய கணவர் மூலம் நான் பெற்றெடுத்த பிள்ளைகள்)எனக் கூறினேன். அதற்கு அண்ணல் நபி(ஸல்)அவர்கள், ஆம், அப்பிள்ளைகளுக்கு நீ செலவழிப்பதற்காக உமக்கு (அல்லாஹூ தஆலாவிடம்) நற்கூலி உண்டு எனப் பகர்ந்தார்கள். புகாரி, முஸ்லிம்: உம்மு ஸலமா(ரலி).

அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி நீ செலவழிக்கும் ஒவ்வொரு செலவுக்கும் உமக்கு நற்கூலி கொடுக்கப்படாமல் இல்லை, எந்த அளவிற்கென்றால், உன் மனைவியின் வாயில் நீ ஊட்டும் உணவுக்கவளம் வரை. புகாரி, முஸ்லிம் : ஸஃது பின் அபீ வக்காஸ்(ரலி).

ஒரு மனிதர் தம் குடும்பத்தாருக்காக, ஒரு செலவை நற்கூலியை நாடியவராக செலவழிப்பாரானால், அது அவருக்கு ஸதகாவாகும். (ஸதகாவின் நன்மையை அவர் பெற்றுக் கொள்ளவார்) புகாரி, முஸ்லிம்: அபூ மஸ்வூதில் பத்ரிய்யி (ரலி).

தான் எவர்களுக்கு உணவளிக்க வேண்டுமோ அவர்களுக்கு உணவளிக்காமல் இருப்பது மனிதனுக்கு பாவத்தால் போதுமானது. அபூதாவூது: அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ்(ரலி).

மேலான கரம் (கொடுக்கும் கரம்) கீழான கரத்தை (வாங்கும் கரத்தை) விடச் சிறந்தது. (அவ்வாறு வழங்கும் பொழுது) உன் குடும்பத்தாரைக் கொண்டு ஆரம்பிப்பாயாக! தர்மங்களிற் சிறந்தது தன் குடும்பத்தாருக்குத் தேவையானதை ஒதுக்கிக் கொண்டு மீதியை தர்மம் செய்வதாகும். யார் பேணுதலைக் கடைபிக்கிறாரோ அவரை அல்லாஹ் பேணுதல் உடையவராகவே ஆக்கி வைப்பான். யார் பிறரிடம் தேவையாகாது இருக்க விரும்புகிறாரோ அவரை அல்லாஹ் பிறரை விட்டும் தேவையற்றவராக ஆக்குவான். (தன் பரக்கத்துகளை அவருக்கு நிறைவாக வழங்குவான்.) புகாரி: அபூஹூ ரைரா(ரலி).

## நீதி நேர்மை

16:90 நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.

49:9 முஃமின்களில் இருசாரார் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால், அவ்விருசாராருக்கிடையில் சமாதானம் உண்டாக்குங்கள். பின்னர் அவர்களில் ஒரு சாரார் மற்றவர் மீது அக்கிரமம் செய்தால், அக்கிரமம் செய்வோர் அல்லாஹ்வுடைய கட்டளையின் பால் திரும்பும் வரையில், (அவர்களுடன்) போர் செய்யுங்கள் அவ்வாறு, அவர்கள் (அல்லாஹ்வின் பால்) திரும்பி விட்டால் நியாயமாக அவ்விரு சாராரிடையே சமாதானம் உண்டாக்குங்கள். (இதில்) நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான்.

5:8 முஃமின்களே! நியாயத்தைநிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும் அல்லாஹ்வுக்கு அஞ்சங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

5:42 அன்றியும், இவர்கள் பொய்யையே அதிகமாகக் கேட்போராகவும், விலக்கப் பட்ட பொருட்களையே விழுங்குவோராகவும் இருக்கின்றனர் (நபியே!) இவர்கள் உம்மிடம் வந்தால், இவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்கும் அல்லது இவர்களைப் புறக்கணித்து விடுவீராயினும், இவர்கள் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாது ஆனால், நீர் (இவர்களிடையே) தீர்ப்பளிப்பீராயின் நியாயமாகவே அவர்களிடையில் தீர்ப்பளிப்பீராக ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் நீதிமான்களையே நேசிக்கின்றான்.

4:58 நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்புவித்து விடவேண்டுமென்றும், மனிதர்களிடையே தீர்ப்பு கூறினால் நியாயமாகவே தீர்ப்புக் கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு (இதில்) மிகவும் சிறந்த உபதேசம் செய்கிறான் நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான்.

முன்னர் பனூ இஸ்ராயீல்களின் காலத்தில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம், ஒரு பூமியை விலைக்கு வாங்கினான். அப்பூமியில் ஒரு தங்கக் கலசத்தை அவன் கண்டெடுத்தான். உடனே, அவன் அப்பூமியை(மனையை) விற்றவனிடம், சென்று உன் தங்கத்தை நீ எடுத்துக்கொள்! நான் உன்னிடம் பூமியை மட்டும் தான் விலைக்கு வாங்கினேன். தங்கத்தை அல்ல! என்று கூறினான். அதற்கு பூமியை விற்றவன் நான் உனக்கு பூமியையும், அதில் உள்ளவைகளையும் சேர்த்து தான் விற்றேன். (ஆகவே தங்கத்தை நீயே வைத்துக்கொள்) என்று பதில் கூறினான். அதனைத் தொடர்ந்து அவ்விருவரும் (மற்றொரு) மூன்றாவதொரு மனிதரிடம் சென்று, தங்கள் வழக்கை எடுத்துரைத்து தீர்ப்புக் கோரினார். அதைக் கேட்ட அந்த மனிதர், உங்களிருவருக்கும் பிள்ளைகள் உள்ளனரா? எனக் கேட்டார். அவர்களில் ஒருவர், எனக்கு ஒரு மகன் உண்டு என்று கூறினார். மற்றொருவர் எனக்கு ஒரு மகள் உண்டு எனக் கூறினார். அது கேட்ட அவர், அப்படியானால் உம்முடைய மகளை, அவருடைய மகனுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்து விடுங்கள். அந்தத் தங்கப் புதையலை அவ்விருவருக்கும் செலவு செய்து விடுங்கள். அதனை அவ்விருவருக்கும் ஸதகாவாக அளித்து விடுங்கள் என்று தீர்ப்புக் கூறினார். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

நபி(ஸல்)அவர்கள் கூற நான் செவிமடுத்துள்ளேன் (முற்காலத்தில்) இரண்டு பெண்மணிகள் இருந்தனர் அவர்களுக்கு (ஆளுக்கொன்றாக) இரண்டு ஆண்மக்கள் இருந்தனர் ஒரு நாள் அவ்விருவரில் ஒருத்தியின் மகனை ஓநாய் கொண்டு சென்று விட்டது. அப்பொழுது அவ்விருவரில் ஒருத்தி உன் மகனைத்தான் ஓநாய் கொண்டு சென்று விட்டது என்றாள் மற்றவளோ இல்லை உன் மகனைத்தான் ஓநாய் கொண்டு செனறு விட்டது என்று கூறினாள். பின் இருவரும் நபி தாவூத் (அலை) அவர்களிடம் சென்று தங்கள் வழக்கை எடுத்துரைத்தனர். அவ்வழக்கை விசாரித்த நபி தாவூத்(அலை) அந்த (உயிருடன் உள்ள) ஆண் குழந்தை பெரியவளுக்கே உரியது என்று தீர்ப்பளித்தார்கள். பின்னர் அவ்விருவரும் நபி தாவூத்(அலை) இவர்களின் புதல்வரான நபி சுலைமான்(அலை) அவர்களிடம் சென்று தங்கள் வழக்கை எடுத்துரைத்தனர். அவர்களின் வழக்கை கேட்டறிந்த நபி சுலைமான்(அலை) அவர்கள் என்னிடம் ஒரு கத்தியைக் கொண்டு வாருங்கள் நான் இக்குழந்தையை இரண்டாக வெட்டி ஆளுக்கு ஒரு பகுதியை தருகிறேன் என்றார்கள். உடனே சிறியவள்(நபியே)அவ்வாறு செய்யாதீர்கள் அல்லாஹ் உங்களுக்கு கிருபைச் செய்வானாக! அப்பிள்ளை அ(பெரிய)வள் மகன் தான் எனக் கூறி னாள் இதனைக் கேட்ட நபி சுலைமான்(அலை)அவர்கள் (இவள் தான் உண்மையான தாயாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து) அக்குழந்தை சிறிய வளுக்கே உரியது எனத் தீர்ப்பு வழங்கினார்கள். புகாரி, முஸ்லிம் : அபூஹுரைரா(ரலி).

நீதிபதி தன் முன்னுள்ள வழக்கில் நன்கு முயற்சி செய்து (ஆழ்ந்து சிந்தித்து) சரியான முறையில் தீர்ப்பளித்து விட்டாள், அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு. அவர்(உண்மையை அறிவதில் நன்கு

முயற்சி செய்தும், அவரின் தீர்ப்பில் தவறு ஏற்பட்டு விடுமானால் அவருக்கு ஒரு நன்மை மட்டும் உண்டு. புகாரி,முஸ்லிம்: அம்ரு பின் ஆஸ்(ரலி).

சூரியன் உதயமாகும் ஒவ்வொரு நாளிலும் மனிதர்களின் ஒவ்வொரு மூட்டின் மீதும் தர்மம் செய்தல் வேண்டும். நீர் இருவருக்கும் மத்தியில் நீதி வழங்குவது தர்மம் ஆகும். ஒரு மனிதருக்கு அவரது வாகனத்தின் விஷயத்தில் நீர் உதவி செய்வது-அவரை அவரது வாகனத்தில் நீர் ஏற்றி விடுவது அல்லது அவர் சாமான்களை அவரது வாகனத்தில் நீர் ஏற்றிவிடுவது தர்மமாகும். இனிய சொற்களும் தர்மமாகும். தொழுகையின் பக்கம் நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டும் தர்மமாகும். தொழுகையின் பக்கம் நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டும் தர்மமாகும். பாதையை விட்டு இடரளிக்கும் பொருள்களை அகற்றுவதும் தர்மமாகும். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

தன் நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத(கியாமத் நாளில்)ஏழு பேர்களுக்கு அல்லாஹ் தன்(அர்ஷின்)நிழலை வழங்குவான். 1.நீதமான அரசர், 2.இறைவணக்கத்தில் வளர்ந்த வாலிபர், 3.மஸ்ஜிதுகளுடன் இணைந்திருக்கும் உள்ளத்தையுடையவர், 4.அல்லாஹ்விற்காக ஒருவரையொருவர் நேசிக்கும் இரண்டு மனிதர்கள். அந்நேசத்தின் மீதே ஒன்று சேர்ந்தார்கள். அந்நேசத்துடனேயே பிரிந்து சென்றார்கள். 5.அந்தஸ்தும் அழகும் நிரம்பிய பெண் அவனை (விபச்சாரத்திற்கு)அழைத்த பொழுதும், நான் அல்லாஹ்வை அஞ்சுகிறேன். எனக் கூறும்(கற்புடைய)மனிதர், 6.தன் வலக்கரம் செலவழிப்பதை இடக்கரம் அறியாத வண்ணம்(மறைமுகமாக)தர்மம் செய்பவர் 7.தனிமையில் அல்லாஹ்வை நினைவு கூறி அதனால் அவரின் இரு கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் மனிதர். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

நிச்சயமாக தங்கள் அதிகாரத்திலும் தங்கள் குடும்பத்தினரிலும், தாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டவர்களிலும் நீதத்தைக் கடைப் பிடித்த நீதிவான்கள், அல்லாஹ்விடம்(கியாமத் நாளில்)ஒளியால் ஆன மேடைகளில் இருப்பார்கள். முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ்(ரலி).

உங்களின் தலைவர்களில் சிறந்தவர், அவர்களை நீங்கள் நேசிப்பவர்களாகவும் அவர்கள் உங்களை நேசிப்பவர்களாகவும், அவர்களுக்கு நீங்கள் துஆச் செய்பவர்களாகவும், அவர்கள் உங்களுக்கு துஆச் செய்பவர்களாகவும் இருக்கிறார்களே அவர்களாவர். உங்கள் தலைவர்களில் கெட்டவர்கள், அவர்களை நீங்கள் வெறுக்கவும், அவர்கள் உங்களை வெறுக்கவும், அவர்களை நீங்கள் சபிக்கவும், அவர்கள் உங்களை சபிக்கவும் செய்கிறார்களே அவர்களாவார். அறிவிப்பாளர்(அவ்ப் பின் மாலிக்(ரலி) கூறுகிறார், அப்படியானால் அவர்களுடன் நாங்கள் போராடலாமா? யா ரஸூலல்லாஹ்! என நாங்கள் கேட்டோம். அதற்கவர்கள் இல்லை, அவர்கள் உங்களில் தொழுகையை நிலைநாட்டிவரும் காலமெல்லாம் இல்லை, அவர்கள் உங்களில் தொழுகையை நிலைநாட்டி வரும் காலமெல்லாம் என (இரு முறை) கூறினார்கள். முஸ்லிம்: அவ்ப் பின் மாலிக்(ரலி).

சுவனவாசிகள் மூவர், 1. நல்லுதவி அருளப்பட்ட நீதமான அரசர், 2. ஒவ்வொரு உறவினருக்கும், முஸ்லிமுக்கும் இரங்கும் இதயமுடைய கிருபை காட்டும் மனிதர், 3.பிள்ளை குட்டிகளையுடைய, பேணுதலை விரும்பும் பேணுதல் மிக்க மனிதர். முஸ்லிம்: இயாழ் பின் ஹிமார்(ரலி).

உன் கஷ்டமான நேரத்திலும், லேசான நேரத்திலும் நீ விரும்புவதிலும், நீ வெறுப்பதிலும் உன்னை விடச் சிறப்பு கற்றுக் கொள்வதிலும்(தலைவரின் பேச்சை)கேட்பதையும், அதற்கு வழிபடுவதையும் நீ அவசியமாக்கிக்கொள்!. முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

ஆயிது பின் அம்ரு(ரலி) அவர்கள் (அப்பொழுது ஈராக்கில் கவர்னராக இருந்த) உபைதுல்லாஹ் பின் ஜியாதிடம் சென்று என் அருமை மகனே! நான் ரஸூலல்லாஹ்(ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். அவர்கள் கூறினார்கள், நிச்சயமாக ஆட்சியாளர்களில் கெட்டவர்கள், மக்களிடம் இரக்கமின்றிக்

கடுமையாக நடந்து கொள்ளும் கொடுங்கோலர்கள் ஆவார்கள். ஆகவே நீர் அவர்களில் ஒருவராக ஆகிவிடுவதை உமக்கு எச்சரிக்கிறேன். எனக் கூறினார்கள். புகாரி,முஸ்லிம்: ஆயிது பின் அமிரு(ரலி).

ஸலமா பின் யஜீதல் ஜூ ஃபி(ரலி) நபி(ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் நபியே! அவர்களின் உரிமையை எங்களிடம் கேட்கக் கூடிய (அதே வேளை) எங்களின் உரிமைகளை மறுக்கக் கூடிய தலைவர்கள் எங்களுக்கு ஏற்பட்டு விட்டால், தாங்கள் எங்களுக்கு என்ன கட்டளையிடுகிறீர்கள்? என வினவினார். அண்ணல் நபி(ஸல்) அவர்கள், அவரைப் புறக்கணித்தார்கள். (அவரின் கேள்விக்கு பதிலளிக்கவில்லை)பின்னர் மீண்டும் அதே கேள்வியை அவர்களிடம் கேட்டார். அப்பொழுது அவர்கள், (தலைவர்களின் பேச்சுக்கு) நீங்கள் செவிசாயுங்கள்! அவர்களுக்கு வழிபடுங்கள்! அவர்கள் மீது சுமத்தப்பட்டவை. அவர்களின் பொறுப்பாக உள்ளன. உங்கள் மீது சுமத்தப்பட்டவை, உங்கள் பொறுப்பாக உள்ளன எனக் கூறினார்கள். (நீதி வழுவாது நேர்மையாக நல்லாட்சி வழங்குவது அவர்களின் பொறுப்பாகும். அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது உங்கள் பொறுப்பாகும்.) முஸ்லிம்: அபூஹூ னைதா வாயில் பின் ஹூ ஜ்ர்(ரலி).

## நோயாளிகளின் நலம் விசாரித்தல்.

---

15:88 அவர்களிலிருந்து, சில வகுப்பினரை இவ்வுலகில் எவற்றைக் கொண்டு சுகம் அனுபவிக்க நாம் செய்திருக்கின்றோமோ அவற்றின் பால் நீர் உமது கண்களை நீட்டாதீர் அவர்களுக்காக நீர் துக்கப்படவும் வேண்டாம் ஆனால் உம் (அன்பென்னும்) இறக்கையை முஃமின்கள் மீது இறக்கும்.

5:32 இதன் காரணமாகவே, “நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்” என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள் இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்.

1.நோயாளியை உடல் நலம் விசாரித்தல். 2.ஜனாஸாவை (நல்லடக்கம் செய்ய) பின் தொடர்ந்து செல்லுதல். 3.தும்மியவருக்கு(யர்ஹமுகல்லாஹ் எனக் கூறி)துஆச் செய்தல். 4.சத்தியம் செய்தவரின் சத்தியத்தை (அது நன்மையானதாக இருந்தால் அதனை)நிறைவேற்றி வைத்தல். 5.அநீதி இழைக்கப்பட்டவருக்கு உதவி செய்தல். 6.அழைப்புக் கொடுத்தவருக்கு பதிலளித்தல். 7.ஸலாமை(மக்களிடையே)பரப்புதல் ஆகிய ஏழு விஷயங்களை அண்ணல் நபி(ஸல்)அவர்கள் எங்களுக்கு ஏவினார்கள். புகாரி,முஸ்லிம்: பராவுப் பின் ஆஜிப்(ரலி).

ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமிடம் ஐந்து உரிமைகள் உள்ளன. 1.ஸலாமுக்கு பதிலளித்தல் 2.நோயாளியை உடல் நலம் விசாரித்தல் 3.ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்லுதல் 4.அழைப்புக்கு பதிலளித்தல் 5. தும்மியவருக்கு(யர்ஹமுகல்லாஹ் எனக் கூறி)துஆச் செய்தல். புகாரி,முஸ்லிம்: அபூஹூ ரைரா(ரலி).

ஒரு முஸ்லிம் தம் சகோதரரை காலையில் உடல் நலம் விசாரித்தால், அன்று மாலை வரை அவருக்காக எழுபதாயிரம் மலக்குகள் துஆச் செய்வார்கள். அவரை மாலையில் உடல் விசாரித்தல், மறுநாள் காலை

வரை எழுபதாயிரம் மலக்குகள் அவருக்காக துஆச் செய்வார்கள். அவருக்கு சுவனத்தில் பறித்த பழங்கள் கிடைக்கும். திர்மிதி: அலீ (ரலி).

ஒரு காட்டரபி நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், அவரை நலம் விசாரிக்கச் சென்றிருந்தார்கள். அவர்கள் நோயாளியை உடல் நலம் விசாரிக்கச் சென்றால்,

"லாப∴ஸ தஹூ ருன் இன்ஷா அல்லாஹ்" பரவாயில்லை, இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்) பரிசுத்தமாகும் (குணமாகம்) எனக் கூறுவார்கள். புகாரி: அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி).

யாருடைய கடைசி வார்த்தையாக் "லாஇலாஹ இல்லல்லாஹ்" (என்ற) திருக்கலிமா ஆகிவிடுகிறதோ, அவர் சுவர்க்கத்தில் நுழைவார். அபூதாவூது, ஹாகிம்: முஆத் (ரலி).

ஒருவர் ஒரு நோயாளியை உடல் நலம் விசாரித்தால் அல்லது அல்லாஹ்வின் விஷயத்தில் அவர் நேசிக்கும் ஒரு சகோதரரைச் சந்தித்தால் அப்பொழுது அவரை ஒரு வானவர் அழைத்து நீர் மணம் பெற்று விட்டீர்! உமது நடை மணம் பெற்று விட்டது. சுவனத்தல் ஓர் இடத்தை நீர் தயார் செய்து கொண்டீர்! என்று கூறுவார். திர்மிதி: அபூஹூ ரைரா (ரலி).

யாரேனும் நோயாளியை விசாரிக்கச் சென்றால் அல்லது அல்லாஹ்விற்காக தம் சகோதரனைச் சந்திக்கச் சென்றால் வாழ்வீராக! உமது நடை சிறந்தது! சுவனத்தில் ஒரு இடத்தை முன்பதிவு செய்து வைத்து விட்டீர் என ஒரு அறிவிப்பாளர் அறிவிக்கிறார். திர்மிதி : அபூஹூ ரைர (ரலி)

## தான தர்மங்கள் செய்தல்.

3:92 நீங்கள் நேசிக்கும் பொருள்களிலிருந்து தானம் செய்யாதவரை நீங்கள் நன்மை அடைய மாட்டீர்கள் எந்தப் பொருளை நீங்கள் செலவு செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

3:134 (பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள் மனிதர் (கள் செய்யும் பிழை) களை மன்னிப்போராய் இருப்பார்கள் (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான்.

என் தந்தை யஜீது (ரலி) அவர்கள் தர்மம் செய்வதற்காகச் சில பொற்காசுகளை தங்களது (சட்டைப் பையிலிருந்து) வெளியே எடுத்து, மஸ்ஜிதில் இருந்த ஒரு மனிதரிடம் (தன் பிரதிநிதியாக இருந்து அவைகளை உரியவர்களுக்கு வழங்கி விடுமாறு) வைத்து விட்டு வந்தார்கள். அதன் பின் நான் அவரிடம் வந்தேன். அப்பொற்காசுகளை (அவரது அனுமதியுடன்) நான் எடுத்துக் கொண்டு என் தந்தையிடம் வந்தேன். (அப்பொற்காசுகள் என் கரங்களில் இருப்பதைக் கண்ட) என் தந்தை நான் உன்னை நாடவில்லையே (நீ எடுத்துக் கொள்வதற்காக அப் பொற்காசுகளை நான் அவரிடம் கொடுத்து வரவில்லையே!) என்றார்கள். அதனை தொடர்ந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சமுகத்திற்கு இவ்விஷயத்தை நான் எடுத்துச் சென்றேன். (நாங்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்ட) அண்ணல் நபி (ஸல்) அவர்கள் யஜீதே! உமக்கு நீர் நிய்யத்து செய்தது உள்ளது. (நீர் நிய்யத் செய்த தர்மத்தின் நன்மை உமக்கு கிடைத்து விட்டது) மு∴னே! நீர் எடுத்துக் கொண்ட பொற்காசுகள் உமக்கு உள்ளன. (நீர் அவற்றை வைத்துக் கொள்ளலாம்) எனக் கூறினார்கள். புகாரி: அபூ யஜீது மு∴னி பின் அல் அக்னஸ் (ரலி).

அண்ணல் நபி(ஸல்) அவர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது சுற்றுபாகம் (ஓரம்) தடிப்பான நஜ்ரான் நாட்டுப் போர்வையை அண்ணலா(ஸல்) தங்கள் மேனியில் போர்த்தியிருந்தார்கள். அப்பொழுது ஒரு காட்டரபி அவர்களிடம் வந்து அவர்களின் மேலங்கியைப் பிடித்து அவர்களைக் கடினமாக இழுத்தார். அப்பொழுது (அவர்களின் மேலங்கி அவர்களை விட்டு நீங்கி விட்டதால்) அவர்களின் தோள் புஜத்தின் மேல்பாகத்தைப் பார்த்தேன். அவர் போர்வையைக் கடுமையாகப் பிடித்து இழுத்ததின் காரணத்தால் அப்போர்வையின் சுற்றுப் பகுதி அண்ணலார்(ஸல்) அவர்களின் மேனியில் அடையாளத்தை ஏற்படுத்தி விட்டது. அவர், முஹம்மதே! உம்மிடமுள்ள அல்லாஹ்வின் பொருளிலிந்து (பைத்துல்மால் எனும் பொது நிதியிலிருந்து) எனக்குக் கொடுக்கும்படி கட்டளையிடுவீராக! எனக் கூறினார். (அதனை ஏற்று) அண்ணலா(ஸல்) அவருக்கு (பொது நிதியிலிருந்து) நன்கொடை வழங்கும்படி உத்தரவிட்டார்கள். புகாரி, முஸ்லிம்: அனஸ்(ரலி).

பெண்களின் கூட்டத்தினரே! நீங்கள் தான தர்மங்கள் (ஸதகா) செய்யுங்கள். நீங்கள் அதிகமாக பிழைபொறுப்புத் (இஸ்தி∴பாா) தேடுங்கள். ஏனெனில் நிச்சயமாக, நான் உங்களை நரகில் அதிகமானவர்களாகக் காண்கிறேன். அப்பொழுது, அவர்களில் ஒரு பெண்மணி யா ரஸூ லல்லலாஹ் நாங்கள் ஏன் நரகில் அதிகமாக உள்ளோம்.? எனக் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் நீங்கள் அதிகமாக சாபமிடுகிறீர்கள். மேலும், உங்கள் கணவர்களுக்கு மாறு செய்கிறீர்கள். அறிவிலும், தீனிலும், குறைவாக இருப்பதுடன், மிகப் பெரும் அறிவாளியையும் மிகைக்கும் ஆற்றல் படைத்தவர்களாக, உங்களை விட யாரையும், நான் காணவில்லை. எனக் கூறினார்கள். அப்பொழுது அப்பெண்மணி யா ரஸூ லல்லாஹ்! அறிவிலும், தீனிலும் நாங்கள் எவ்வாறு குறைவானவர்கள்? என்று கேட்டார். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் நீங்கள் இருவர் சான்று பகருவது, ஓர் ஆணின் சான்று பகருதலுக்கு நிகராக இருக்கிறது. (இது அறிவின் குறைவிற்கு உதாரணமாகும்) நீங்கள் மாதத்தில் சில குறிப்பிட்ட நாட்களில் (மாதவிடாய் உடைய நாட்களில்) தொழாமல் இருந்து விடுகிறீர்கள். (இது தீனில் உங்களின் நிலை குறைவாக இருப்பதற்கு உதாரணமாகும்) எனக் கூறினார்கள். முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி).

உங்களுக்கு முன்னால் வாழ்ந்த மக்களில் ஒரு மனிதர் நான் நிச்சயமாக ஸதகா (தர்மம்) கொடுப்பேன் என்று கூறினார். பிறகு ஸதகாவை எடுத்துக் கொண்டு, இரவில் (தெரியாமல்) ஒரு திருடனிடம் கொடுத்து விட்டு வந்து விட்டார். காலையில் ஒரு திருடனுக்குச் ஸதகாக் கொடுக்கப்பட்டு விட்டது என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

அதைக் கேட்ட அம்மனிதர், யா அல்லாஹ்! உனக்கே எல்லாப் புகழும். இப்பொழுது மீண்டும் நான் நிச்சயமாக ஸதகாக் கொடுப்பேன். என்று கூறினார். பிறகு அந்த ஸதகாவை இரவில் எடுத்துக் கொண்டு சென்று ஒரு விபச்சாரியிடம் கொடுத்து விட்டார். பிறகு காலையில், மக்கள் இன்று இரவு ஒரு விபச்சாரிக்கு ஸதகாக் கொடுக்கப்பட்டு விட்டது எனப் பேசிக் கொண்டனர். அதைக் கேட்ட அம்மனிதர், யா அல்லாஹ்! உனக்கே எல்லாப் புகழும்! இன்று நான் மீண்டும் ஸதகாக் கொடுக்கப் போகிறேன். என்று கூறினார். பிறகு அன்று இரவு அவர் ஸதகாவை எடுத்துக் கொண்டு சென்று ஒரு செல்வந்தரிடம் கொடுத்து வந்து விட்டார். மறுநாள் காலையில் ஒரு செல்வந்தருக்கு ஸதகாக் கொடுக்கப்பட்டது என மக்கள் பேசிக் கொண்டனர். அதைக் கேட்டு யா அல்லாஹ்! என் ஸதகா திருடன், விபச்சாரி, செல்வந்தர் ஆகியோர்களுக்குக் கிடைத்து விட்டது. ஆகவே எந்த நல்ல நோக்கத்திற்காக அது கொடுக்கப்பட்டதோ- அந்த நோக்கம் தவறி விட்டதே எனக் கவலையுடன் கூறினார். அன்று இரவு, அவருடைய கனவில், உம்முடைய ஸதகா ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. நீர் திருடனுக்கு வழங்கிய ஸதகாவின் காரணமாக அவன் திருட்டுச் செயலை விட்டு விலகக் கூடும். நீர் விபச்சாரிக்கு வழங்கிய ஸதகாவின் காரணமாக, அவள் விபச்சாரச் செயலை விட்டும் திருந்தக்

கூடும். நீர் செல்வந்தருக்கு வழங்கிய ஸதகாவின் காரணமாக ,அவர் படிப்பினைப் பெற்று (உம்மைப் போன்று) அவருக்கு அல்லாஹ் வழங்கிய செல்வங்களிலிருந்து அல்லாஹ்வின் பாதையில் செலவழிப்பவராக, (தயாள குணம் படைத்தவராக) ஆகக் கூடும் என கனவில் கூறப்பட்டது. புகாரி: அபூஹுரைரா (ரலி).

மனிதன் மரணமடைந்து விட்டால் மூன்று அமல்களைத் தவிர, மீதமுள்ள அமல்கள் அனைத்தும் அவனை விட்டுத் துண்டிக்கப்பட்டு விடும். அவை: 1. ஸதகத்துல் ஜாரியா-நிரந்தரமாக நடைபெறக் கூடிய தர்மம். 2. பயன் பெறப்படும் கல்வி. 3. அவருக்காக துஆச் செய்யும் அவரின் ஸாலிஹான பிள்ளை. (இம்மூன்றின் மூலம் மரணத்திற்குப் பிறகும் அவருக்கு நன்மைகள் வந்து சேர்ந்து கொண்டே இருக்கும்) முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

நரக நெருப்பை அஞ்சிக் கொள்ளுங்கள்! ஒரு பேரீத்தம்பழத் துண்டை தர்மம் செய்வது கொண்டாகிலும் சரியே! புகாரி, முஸ்லிம்: ஹாதம் பின் அதீ (ரலி).

ஒவ்வொரு நாளும் அடியார்கள் காலையில் எழுந்ததும் இரண்டு மலக்குகள் இறங்காமல் இருப்பதில்லை. அவர்களில் ஒருவர் கூறுவார், யா அல்லாஹ்! (நல் வழியில்) செலவழிப்பவருக்கு நீ அழகிய பரக்கத்தை அருள்வாயாக! மற்றொருவர் கூறுவார், யா அல்லாஹ! (நல்வழியில்) செலவழிக்காமல் தடுத்துக் கொள்பவருக்கு நீ அழிவைக் கொடுப்பாயாக! புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

அல்லாஹுதஆலா கூறுகிறான், ஆதமின் மகனே! நீ (நல்வழியில்) செலவழிப்பாயாக! அப்பொழுது உமக்கு செலவழிக்கப்படும் (உமக்கு அதன் நற்கூலி வழங்கப்படும்). புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்திற்காக எதனைக் கேட்கப்பட்டாலும் அவர்கள் அதனை வழங்குவது தவிர வேறில்லை. அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். (அவர்களிடம் கேட்டார்.) அவருக்கு இரண்டு மலைகளுக்கு மத்தியில் உள்ள ஆடுகளை அண்ணலார் (ஸல்) (அன்பளிப்பாக) வழங்கினார்கள். அவர் தம் கோத்திரத்தினரிடம் திரும்பிச் சென்று எம் கோத்திரத்தினர்களே! நீங்கள் முஸ்லிம் ஆகுங்கள்! நிச்சயமாக முஹம்மது (ஸல்) வறுமைக்கு அஞ்சாமல் வாரி வழங்குகிறார். எனக் கூறினார். (அறிவிப்பாளர் அனஸ் (ரலி) கூறுகிறார்கள்) சிலர் உலகின் நன்மையை நாடி முஸ்லிம் ஆகின்றனர். பின்னர் விரைவில் இஸ்லாம், அவர்களுக்கு உலகம் மற்றும் அதிலுள்ளவை அனைத்தையும் விட மிகப் பிரியமானதாக ஆகிவிடுகிறது. முஸ்லிம்: அனஸ் (ரலி).

தர்மம் யாரின் பொருளையும் குறைத்து விடாது. அடியான் பிறரின் தவறை மன்னிப்பானேயானால், அல்லாஹ் அவன் கண்ணியத்தை அதிகப்படுத்துவான். யார் அல்லாஹ்வுக்காக பணிவை மேற்கொள்கிறாரோ அவரின் அந்தஸ்தை அல்லாஹ் உயர்த்துவான். முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

உயர்ந்த கரமாகிறது, தாழ்ந்த கரத்தை விட சிறந்ததாகும். நீர் எவர்களுக்கு பொறுப்பாளராக உள்ளீரோ, அவர்களுக்கு (குடும்பத்தினர் மற்றும் பணியாட்கள்) ஆகியோரைக் கொண்டு நீர் செலவழிப்பதை ஆரம்பிப்பீராக! தர்மங்களில் சிறந்தது, தன் தேவை போக மீதியை தர்மம் செய்வதாகும். யார் பேணுதலாக இருக்கவிரும்புகிறாரோ, அல்லாஹ் அவரை பேணுதலாக ஆக்கி வைப்பான். யார் தேவையற்று இருக்க விரும்புகிறாரோ அல்லாஹ் அவரை தேவையற்று ஆக்கிவைப்பான். புகாரி, முஸ்லிம்: ஹகீம் பின் ஹிஜாம் (ரலி).

## வீர மரணம் (ஷஹீது) அடைதல்.

2:154 இன்னும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை "(அவர்கள்) இறந்துவிட்டார்கள்" என்று கூறாதீர்கள் அப்படியல்ல! அவர்கள் உயிருள்ளவர்கள் எனினும் நீங்கள் (இதை) உணர்ந்து கொள்ள மாட்டீர்கள்.

3:169 அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களை மரித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணாதீர்கள் - தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள் - (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள்.

ஒரு காட்டரபி அண்ணல் நபி(ஸல்)அவர்களிடம் வந்து, யா ரஸூலல்லாஹ்! ஒருவர் போரின் வெற்றிப் பொருட்களுக்காக போராடுகின்றார். மற்றொருவர் தம் பெயர் நினைவு கூறப்படுவதற்காக போராடுகின்றார். மற்றொருவர் தம் அந்தஸ்தை மக்களுக்கு காட்டுவதற்காக போராடுகின்றார். மற்றொரு அறிவிப்பில் ஒருவர் வீரத்தை வெளிகாட்டப் போராடுகிறார். மற்றொருவர் ரோஷத்தை வெளிபடுத்தப் போரடுகிறார். மற்றொரு அறிவிப்பில் ஒருவர் கோபத்திற்காக போராடுகின்றார். (இவ்வாறு பலர் பல எண்ணங்களில் போராடுவதால்) அல்லாஹ்வின் பாதையில் போராடுபவர் யார்? என வினவினார். அதற்கு அண்ணல் நபி(ஸல்)அவர்கள் யார் அல்லாஹ்வின் சொல் உயர்வதற்காக போராடுகின்றாரோ, அவரே அல்லாஹ்வின் பாதையில் உள்ளவர் எனக் கூறினார்கள். புகாரி, முஸ்லிம்: அபூ மூஸா(ரலி).

ஒரு முறை நபி(ஸல்)அவர்கள் தங்கள் தோழர்களிடம் நீங்கள் ஷுஹதாக்கள் என்று யாரைக் கருதுகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்குத் தோழர்கள், யார் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டரோ அவர்தாம் ஷஹீது ஆவார் எனக் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அப்படியானால் என் உம்மத்தில் ஷுஹதாக்கள் மிகக் குறைவாகவே இருப்பர் என்றார்கள். அப்பொழுது தோழர்கள் அப்படியானால் ஷுஹதாக்கள் யார்? என்று கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்கள் ஷஹீத் ஆவார். அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர் பிளேக் நோயால் மரணமடைந்தவர் ஷஹீத் ஆவார். காலரா நோயால் மரணமடைந்தவர் ஷஹீது ஆவார். நீரில் மூழ்கி மரணமடைந்தவர் ஷஹீத் ஆவார் எனக் கூறினார்கள். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

அபுல் அஃவர் ஸயீது பின் ஜைது பின் அம்ரு பின் நுஃபைல்(ரலி) இவர் சுவர்க்கத்தைக் கொண்டு நல்வாழ்த்துச் சொல்லப்பட்ட அஷரத்துல் முபஷ்ஷரா எனும் பத்து ஸஹாபாக்களில் ஒருவராவார் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். யார் தம் பொருளைப் பாதுகாக்கும் பொழுது கொள்ளப்பட்டாரோ அவரும் ஷஹீது ஆவார். யார் தம் உயிரைப் பாதுகாக்கும்பொழுது கொல்லப்பட்டாரோ அவரும் ஷஹீது ஆவார். யார் தம் தீனைப் பாதுகாக்கும்பொழுது கொல்லப்பட்டாரோ அவரும் ஷஹீது ஆவார். யார் தம் குடும்பத்தாரைப் பாதுகாக்கும் பொழுது கொல்லப்பட்டரோ, அவரும் ஷஹீது ஆவார். அபூதாவூது, திர்மிதி: அபுல் அஃவர் ஸயீது பின் ஜைது பின் அம்ரு பின் நுஃபைல்(ரலி).

ஒரு மனிதர் வந்து யா ரஸூலல்லாஹ், ஒரு மனிதன் என் பொருளைப் பற்றிக்கொள்ள நாடுபவனாக என்னிடம் வந்தால் நான் என்ன செய்ய வேண்டும்? என்பதை எனக்கு அறிவித்துக் தாருங்கள் எனக் கேட்டார். அதற்கு அண்ணல் நபி(ஸல்)அவர்கள், அவனுக்கு உன் பொருளைக் கொடுக்காதே! என்றார்கள். அதற்கவர், அவன் என்னைத் தாக்கினால் நான் என்ன செய்வது என்றார். நபியவர்கள், நீயும் அவனைத் தாக்குவாயாக! என்றார்கள். அவன் என்னைக் கொன்றுவிட்டால்...... என்றார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், நீ அப்பொழுது ஷஹீதாக இருப்பாய் எனப் பகர்ந்தார்கள். அதற்கு

(மாறாக) நான் அவனைக் கொன்று விட்டால்-என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், அப்பொழுது அவன் நரகத்திற்கு செல்வான் எனக் கூறினார்கள். முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

அபூதாபித் மற்றொரு சொல்லில் அபூஸயீது, மற்றொரு சொல்லில் அபூ வலீது ஸஹ்ல் பின் ஹுனைப்(ரலி)- இவர் பத்ரு ஸஹாபியாவார்-அறிவிக்கிறார்: அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், உண்மையாகவே யார் ஷஹாதத் தை (இறைவனின் திருப்பாதையில் வீரமரணமடைவதை அல்லாஹு தஆலா விடம்) கேட்கிறாரோ, அவரை ஷு ஹதாக்களது அந்தஸ்தில் அல்லாஹு தஆலா சேர்த்து வைக்கிறான். அவர் தம் விரிப்பில் (சாதாரணமாக) மரணமடைந்த போதிலும் சரியே! முஸ்லிம்: அபூதாபித் மற்றொரு சொல்லில் அபூஸயீது, மற்றொரு சொல்லில் அபூ வலீது ஸஹ்ல் பின் ஹுனைப்(ரலி).

கைபர் போரின் தினத்தன்று நபித்தோழர்களின் ஒரு கூட்டம் அண்ணல் நபி(ஸல்) அவர்களிடம் வந்து இன்னார் ஷஹீதாகி விட்டார் இன்னார் ஷஹீதாகிவிட்டார். என்று கூறிக் கொண்டே சென்று (ஒரு மனிதரைப் பற்றி)இவரும் ஷஹீதாகி விட்டார் என்று கூறினார்கள். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவ்வாறல்ல! ஒரு போர்வை, அல்லது ஒரு நீண்ட மேலங்கியின் விஷயத்தில் (போரின் வெற்றிப் பொருள்கள் பங்கிடப்படுவதற்கு முன்பாக ஒரு போர்வை அல்லது ஓர் நீண்ட மேலங்கியை திருட்டுத் தனமாக அவர் எடுத்து வைத்துக் கொண்டதால்) அவரை நான் நரகத்தில் பார்க்கிறேன் எனக் கூறினார்கள். முஸ்லிம்: உமர் பின் கத்தாப்(ரலி).

## வெட்கம்

அண்ணல் நபி(ஸல்) அவர்கள், ஒரு அன்ஸாரித் தோழரின் அருகில் நடந்து சென்றார்கள். அவர் தம் சகோதரருக்கு வெட்கத்தின் விஷயத்தில் (வெட்கப்பட வேண்டாம்) என்று உபதேசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது(அங்கு வந்த)அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவரை விட்டு விடுவீராக! நிச்சயமாக வெட்கம், ஈமானின் ஒரு பகுதியாகும். என (அவருக்குக்)கூறினார்கள். புகாரி, முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி).

வெட்கம் நலவைத் தவிர வெறெதனையும் கொண்டு வராது. முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில்,வெட்கம் அனைத்தும் நலவாகும் எனக் கூறப்பட்டுள்ளது. புகாரி, முஸ்லிம்: இம்ரான் பின் ஹுஸைன்(ரலி).

ஈமான் எழுபது சிறு அல்லது அறுபது சிறு கிளைகளாகும். அவற்றில் மிக மேலானது லாஇலாஹ இல்லல்லாஹ் எனும் திருக்கலிமாவாகும். அவற்றில் மிகத் தாழ்மையானது பாதையில் உள்ள (கல், முள், கண்ணாடிகள் போன்ற)இடையூறு அளிக்கும் பொருளை அகற்றுவதாகும். வெட்கம், ஈமானின் ஒரு கிளையாகும். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

கன்னிப் பெண் தன் அறையில் வெட்கப்படும் வெட்கத்தை விட மிக அதிகமாக அண்ணல் நபி(ஸல்) அவர்கள் வெட்கப்படுபவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு வெறுப்பான எதாவதொரு விஷயத்தை அவர்கள் பார்த்தால், அதனை (அவர்களின் வெறுப்பை) அவர்களின் முகத்தில் நாங்கள் அறிந்து கொள்வோம். புகாரி, முஸ்லிம்: அபூஸயீதில் குத்ரீ(ரலி).

எந்த விஷயத்திலேனும் அநாகரீகம் சேர்ந்தால் அதைக் குறைவு படுத்தாமலிருப்பதில்லை. எந்த விஷயத்திலும் வெட்க உணர்வு சேர்ந்தால் அதை அழகு படுத்தாமல் இருப்பதில்லை என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். திர்மிதி: அனஸ்(ரலி).

வெட்கம்ஈ மானின் ஒரு பகுதியாகும் ஈமான் சுவனத்தில் சேர்க்கும். வெட்கமின்மை கடினசித்தத்தின் ஒரு பகுதியாகும். கடினசித்தம் நரகில் சேர்க்கும். திர்மிதி: அபூஹுரைரா (ரலி).

## விருந்தாளியை உபசரித்தல்

---

51:24 இப்றாஹீமின் கண்ணியம் மிக்க விருந்தினர்களின் செய்தி உமக்கு வந்ததா?

51:25 அவர்கள், அவரிடம் பிரவேசித்த போது, (அவரை நோக்கி "(உங்களுக்கு) "ஸலாம்' என்று கூறினார்கள் (அதற்கவர்), "(உங்களுக்கு) "ஸலாம்" என்று கூறினார். "இவர்கள் (நமக்கு) அறிமுகமில்லா சமூகத்தாராக (இருக்கின்றார்களே" என்று எண்ணிக் கொண்டார்).

51:26 எனினும் அவா தம் குடும்பத்தாரிடம் விரைந்து சென்று, ஒரு கொழுத்த காளைக் கன்றை(ப் பொறித்துக்) கொண்டு வந்தார்.

51:27 அதை அவர்கள் முன் வைத்து, "நீங்கள் புசிக்க மாட்டீர்களா?" என்று கூறினார்.

11:78 அவருடைய சமூகத்தார் அவரிடம் விரைந்தோடி வந்தார்கள் இன்னும் முன்னிருந்தே அவர்கள் தீய செயல்களே செய்து கொண்டிருந்தார்கள். (அவர்களை நோக்கி லூத்) "என் சமூகத்தார்களே! இதோ இவர்கள் என் புதல்விகள் இவர்கள் உங்களுக்கு(த் திருமணத்திற்கு)ப் பரிசுத்தமானவர்கள் எனவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் இன்னும் என் விருந்தினர் விஷயத்தில் என்னை நீங்கள் அவமானப் படுத்தாதீர்கள் நல்ல மனிதர் ஒருவர் (கூட) உங்களில் இல்லையா?" என்று கூறினார்.

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர், தம் விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும்! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர், தம் உறவினரைச் சேர்த்துக்கொள்ளட்டும்! அல்லாஹ்வையும், மறுமைநாளையும் நம்பிக்கைக் கொண்டவர் (பேசினால்) நன்மையைப் பேசட்டும்! அல்லது வாய் மூடி இருக்கட்டும்! புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ, அவர் தம் விருந்தாளிக்கு தம் அன்பளிப்பை வழங்கி கண்ணியப்படுத்தட்டும் என்ற பொழுது நபி(ஸல்)அவர்களின் தோழர்கள், அல்லாஹ்வின் தூதரே! அன்பளிப்பு என்ன? என வினவினார்கள். அதற்கவர்கள் அவரின் ஒரு பகல் ஓர் இரவு ஆகும் (ஒரு நாள் அவருக்கு சிறந்த உணவுகளை அளிப்பது அவருக்கு அளிக்கப்படும் அன்பளிப்பாகும்) விருந்தளிப்பு (மொத்தம்) மூன்று நாட்களாகும். அதற்குப் பின்னால் உள்ளது அவருக்கு (விருந்தினருக்கு) அவர் செய்யும் ஸதகா (தர்மம்) ஆகும் எனக் கூறினார்கள். புகாரி,முஸ்லிம்: அபூ ஷுரைஹ் குவைலிது பின் அம்ரில் குஜாஇ (ரலி).

ஒரு மனிதர் அண்ணல் நபி(ஸல்) அவர்களையும், அவர்களுடன் நான்கு பேரையும் விருந்துண்ண அழைத்திருந்தார்கள். அவர்கள் விருந்துண்ண புறப்பட்டுச் சென்ற பொழுது அவர்களை ஒருவர் பின் தொடர்ந்து வந்தார். (விருந்தளிப்பவரின்) வீட்டு வாயிலை அடைந்ததும், அண்ணல் நபி(ஸல்)அவர்கள்(வீட்டுக்காரரிடம்)இவர் எங்களைப் பின் தொடர்ந்து வந்துள்ளார். நீர் விரும்பினால் அவருக்கு அனுமதி கொடுப்பீராக! (அல்லது)அவர் திரும்பிச் செல்லவேண்டுமென நீர் நாடினால், அவர் திரும்பிச் சென்று விடுவார், எனக் கூறினார்கள். அதற்கவர், அவருக்கு நான் அனுமதி கொடுக்கிறேன். யா ரஸூலல்லாஹ்! எனக் கூறினார். புகாரி,முஸ்லிம்: அபூ மஸ்வூது அல் பத்ரீ (ரலி).

அல்லாஹ்வின் தூதரே! ஒரு மனிதரிடம் நான் சென்ற போது என்னை அவர் விருந்தளித்து உபசரிக்கவில்லை. அவர் என்னிடம் வரும்போது அவரைப் போலவே நானும் நடந்து கொள்ளலாமா? என நபி(ஸல்) அவர்ளிடம் வினவினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் கூடாது! அவருக்கு நீர் விருந்தளிப்பீராக! என்றனர். நான் மட்டரக ஆடையினை அணிந்திருந்ததைக் கண்ட நபிகளார் உம்மிடம் வசதி உள்ளதா? என்று வினவ ஆடு, ஒட்டகம் மற்றும் அனைத்து செல்வ வசதிகளையும் அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான் என்று கூறினேன். அதற்கு நபி(ஸல்)அவர்கள் அந்த செல்வம் உம்மீது தென்படட்டும் எனக் கூறினார்கள். திர்மிதி: மாலிக் பின் கவ்ஃபு(ரலி)

## இரகசியம் பாதுகாத்தல்

17:34 அநாதைகள் பிராயமடையும் வரை, (அவர்களின் பொறுப்பேற்றிருக்கும்) நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள், இன்னும் (நீங்கள் அல்லாஹ்விடமோ, மனிதர்களிடமோ கொடுத்த)வாக்குறுதியை நிறை வேற்றுங்கள் நிச்சயமாக (அவ்) வாக்குறுதி (பற்றித் தீர்ப்பு நாளில் உங்களிடம்) விசாரிக்கப்படும்.

கியாமத் நாளில் அல்லாஹு தஆலாவிடம் மனிதர்களில் மிகக்கெட்டவன், தன் மனைவியிடம் இல்லற உறவு கொண்டு விட்டு, பின்னர் அவளின் இரகசியத்தை பரப்புபவன் ஆவான். முஸ்லிம்: அபூஸயீதில் குத்ரீ(ரலி).

அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அறிவிக்கிறார்கள்: உமர்(ரலி) அவர்கள், தங்கள் மகளார் ஹஃப்ஸா(ரலி)விதவையாக இருந்த பொழுது, (நடந்த ஒரு நிகழ்ச்சியைக்) கூறுகிறார்கள். நான் உத்மான் பின் அஃப்பான்(ரலி)அவர்களை சந்தித்து, (என் மகள்) ஹஃப்ஸாவைப் பற்றி எடுத்துக் கூறினேன். நீங்கள் விரும்பினால் உமரின் மகள் ஹஃப்ஸாவை உங்களுக்கு திருமணம் முடித்துத் தருகிறேன், எனக் கூறினேன். அதற்கவர், இது விஷயத்தைப் பற்றி நான் சிந்தித்துப் பிறகு கூறுகிறேன். எனக் கூறிவிட்டார். பிறகு நான் சில நாட்கள் எதிர்பார்த்தேன். பின்னர் என்னை அவர் சந்தித்து நான் இப்பொழுது திருமணம் முடிக்க விரும்பவில்லை, எனக் கூறிவிட்டார். பின்னர் நான் அபூபக்ர்(ரலி) அவர்களைச் சந்தித்து நீங்கள் விரும்பினால், உமரின் மகள் ஹஃப்ஸாவை உங்களுக்குத் திருமணம் முடித்துத் தருகிறேன் என்று கூறினேன். அதற்கவர்கள், அமைதியாக வாய்மூடி இருந்து விட்டார்கள். எனக்கு எந்தவொரு பதிலும் கூறவில்லை. இதனால் அவர் மீது, உத்மான்(ரலி) மீது இருந்த வருத்ததை விட அதிக வருத்தம் எனக்கு ஏற்பட்டது. பின்னர் சில நாட்கள் எதிர்பார்த்தேன். பின்னர் அண்ணல் நபி(ஸல்) அவர்கள், ஹஃப்ஸாவை பெண் கேட்டார்கள். நான் அவர்களுக்கு ஹஃப்ஸாவை திருமணம் முடித்துக் கொடுத்தேன். பின்னர் அபூபக்ர்(ரலி) அவர்கள் என்னை சந்தித்து, ஹஃப்ஸாவை மணமுடித்துக் கொள்ளுமாறு நீர் எம்மிடம் கூறிய பொழுது, நான் எந்தவொரு பதிலும் அளிக்காதது பற்றி நீர் என் மீது வருத்தமடைந்திருப்பீர், எனக் கூறினார்கள். அதற்கு நான் ஆம் எனக் கூறினேன். அதற்கவர்கள், நான் அப்பொழுது பதில் கூறாமலிருந்ததற்குக் காரணம் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் ஹஃப்ஸாவைப் பற்றி(மணமுடிப்பது சம்பந்தமாக)கூறிக் கொண்டிருந்தார்கள். (ஆலோசனை கலந்து கொண்டிருந்தார்கள்) ஆகவே நான் நபி(ஸல்) அவர்களின் இரகசியத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை. ஒரு வேலை நபி(ஸல்) அவர்கள் ஹஃப்ஸாவை மணமுடிக்காமல் இருந்திருந்தால், நான் அவர்களை மணமுடிக்க ஏற்றுக் கொண்டிருப்பேன் எனக் கூறினார்கள். புகாரி: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி).

(ஒருமுறை) நபி(ஸல்) அவர்களின் மனைவிமார்கள், நபி(ஸல்) அவர்களுடன் இருந்தனர். அப்பொழுது ஃபாத்திமா(ரலி) நடந்து வந்தார். அவர்களின் நடை, நபி(ஸல்) அவர்களின் நடையைப் போன்றே இருக்கும். நபி(ஸல்)அவர்கள், மகளைப் பார்த்ததும் வரவேற்றார்கள். மர்ஹபன் பி இப்னதீ என் மகளின் வருகை நல்வரவாகுக! எனக் கூறினார்கள். பின்னர் அவரை தங்கள் வலது புறம் அல்லது இடது புறம் உட்காரவைத்துக் கொண்டார்கள். பின்னர் ஏதோ ஒரு விஷயத்தை மகளிடம் இரகசியமாகக் கூறினார்கள். உடனே ஃபாத்திமா(ரலி) கடுமையாக அழுதார். ஃபாத்திமாவின் கவலையைப் பார்த்து விட்டு இரண்டாவது தடவையாக ஏதோ ஒரு விஷயத்தை (மீண்டும்) இரகசியமாகக் கூறினார்கள். அதனைக் கேட்டு ஃபாத்திமா(ரலி) சிரித்து விட்டார். அப்பொழுது நான் ஃபாத்திமாவிடம், நபி(ஸல்) அவர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு மத்தியில் ஏதோ ஒரு விஷயத்தை உன்னிடம் இரகசியமாகக் கூறினார்கள். அப்பொழுது நீ அழுது விட்டாய்! எனக் கூறினேன். பின்னர் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் எழுந்து சென்றதும், ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் உன்னிடம் என்ன சொன்னார்கள்? என அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கு பாத்திமா(ரலி) நான் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களின் இரகசியத்தை வெளியிடமாட்டேன் எனக்கூறிவிட்டேன் எனக் கூறினார். பின்னர் அண்ணல் நபி(ஸல்) அவர்கள் மரணமடைந்த பின் நான் ஃபாத்திமாவிடம் நபி(ஸல்) அவர்கள் உன்னிடம் (இரகசியமாக்) கூறியது என்ன? என்பதை நீ என்னிடம் கூறவேண்டுமென (சிறிய தாயார் என்ற முறையில்) உன் மீது எனக்குள்ள உரிமையைக் கொண்டு உறுதியாகக் கேட்கிறேன் என்று கூறினேன். அதற்கவர் சரி நான் இப்பொழுது கூறுகிறேன். முதல்தடவை என்னிடம் இரகசியமாகக் கூறிய பொழுது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஜிப்ரீல்(அலை) அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறை அல்லது இருமுறை என்னிடம் குர்ஆனை ஓதிக்காட்டுவார்கள். இப்பொழுது என்னிடம் இரண்டு முறை ஓதிக்காண்பித்தார்கள். என் தவணை (மரணம்) நெருங்கி விட்டதாகவே கருதுகிறேன். ஆகவே நீ பொறுமை செய்வாயாக! அல்லாஹ்வை பயந்து கொள்வாயாக! நிச்சயமாக உனக்கு முன்னால் செல்பவர்களில் நான் சிறந்தவனாக ஆகிவிட்டேன். அப்பொழுதான் நீங்கள் பார்த்த அந்த அழுகையை நான் அழுதேன். பின்னர் என் கவலையையும், திடுக்கத்தையும் பார்த்து விட்டு இரண்டாவது முறையாக என்னிடம் இரகசியமாக, ஃபாத்திமாவே! நீ முஃமினான பெண்களின் தலைவியாக, அல்லது இந்த உம்மத்தின் பெண்களின் தலைவியாக ஆவதைக் கொண்டு திருப்தி கொள்கிறாயா? எனக் கூறினார்கள். அப்பொழுது தான் நீங்கள் பார்த்த அந்தச் சிரிப்பை நான் சிரித்தேன். புகாரி, முஸ்லிம்: ஆயிஷா(ரலி).

அனஸ்(ரலி) அவர்கள் சொன்னதாக தாபித் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : ஒரு முறை ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். நான் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். (வந்ததும்) எங்களுக்கு ஸலாம் கூறினார்கள். பின்னர் என்னை ஒரு தேவைக்காக அனுப்பி வைத்தார்கள். (நான் சென்று அந்த வேலையை முடித்து விட்டு) என் வீட்டுக்கு என் தாயாரிடம் தாமதமாகச் சென்றேன். அப்பொழுது என் தாயார் என்னிடம் ஏன் இவ்வளவு தாமதம்? என வினவினார்கள். அதற்கு நான், நபி(ஸல்) அவர்கள் ஒரு தேவைக்காக என்னை அனுப்பி வைத்திருந்தார்கள் எனக் கூறினேன். அதற்கு என் தாயார் நபி(ஸல்)அவர்களின் தேவை என்ன? எனக் கேட்டார்கள். அதற்கு நான் அது இரகசியம் எனக் கூறினேன். அப்படியானால் நபி(ஸல்) அவர்களின் இரகசியத்தை நீ யாரிடமும் கூறவேண்டாம்! என என் தாயார் கூறினார். அனஸ்(ரலி) கூறுகிறார்கள். (தாபிதே!) நான் அந்த இரகசியத்தை யாரிடமும் கூறுவதாக இருந்தால் உம்மிடம் கூறியிருப்பேன் நபி(ஸல்) அவர்களின் இரகசியத்தை நான் வெளியிட விரும்பவில்லை. ஆகவே உம்மிடமும் கூறவில்லை. (முஸ்லிம்)

24:31 இன்னும் முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக! அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும் தங்கள் அழகலங்காரத்தை அதினின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது. இன்னும் தங்கள் முன்றானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும் மேலும், (முஃமினான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள், அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள், அல்லது தங்கள் பெண்கள், அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அழகலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது. மேலும், தாங்கள் மறைத்து வைக்கும் அழகலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம் மேலும், முஃமின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்.

11:3 “நீங்கள் உங்கள் இறைவனிடம் மன்னிப்பைத் தேடி (பாவங்களை விட்டு) அவனிடம் திரும்புங்கள் (நீங்கள் அவ்வாறு செய்தால்) அவன் ஒரு குறித்த தவணைவரை உங்களுக்கு வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்துவான் இன்னும், அருளுடைய ஒவ்வொருவருக்கும் (மறுமையில்) தன் அருளை (அதிகமாகவே) கொடுப்பான் ஆனால் நீங்கள் (ஈமான் கொள்வதைப்) புறக்கணித்தால், மாபெரும் நாளின் வேதனை குறித்து நிச்சயமாக உங்களுக்காக நான் பயப்படுகிறேன்” (என்றும்).

66:8ஈ மான் கொண்டவர்களே! கலப்பற்ற (மனதோடு) அல்லாஹ்விடம் தவ்பா செய்து, பாவமன்னிப்புப் பெறுங்கள் உங்கள் இறைவன் உங்கள் பாவங்களை உங்களை விட்டுப் போக்கி உங்களைச் சுவனச் சோலைகளில் பிரவேசிக்கச் செய்வான் அவற்றின் கீழே ஆறுகள் (சதா) ஓடிக் கொண்டே இருக்கும் (தன்) நபியையும் அவருடன் ஈமான் கொண்டார்களே அவர்களையும் அந்நாளில் அல்லாஹ் இழிவுபடுத்தமாட்டான் (அன்று ஈடேற்றம் பெற்ற) அவர்களுடைய பிரகாசம் (ஒளி) அவர்களுக்கு முன்னும் அவர்களுடைய வலப்புறத்திலும் விரைந்து கொண்டிருக்கும் அவர்கள் “எங்கள் இறைவா! எங்களுக்கு, எங்களுடைய பிரகாசத்தை நீ முழுமையாக்கி வைப்பாயாக! எங்களுக்கு மன்னிப்பும் அருள்வாயாக! நிச்சயமாக நீ எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றலுடையவன்” என்று கூறி(ப் பிரார்த்தனைச் செய்து) கொண்டு இருப்பார்கள்.

அல்லாஹூ தஆலா கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியான் ஒரு பாவத்தைச் செய்து விடுகிறான். பிறகு யா அல்லாஹ்! என் பாவத்தை மன்னிப்பாயாக! என்று கூறுகிறான். அப்பொழுது அல்லாஹூ தஆலா, என் அடியான் ஒரு பாவத்தை செய்து விட்டான். பாவத்தை மன்னிக்கும், மற்றும் பாவத்தைக் கொண்டு பிடிக்கும் இரட்சகன் தனக்கு உண்டு என்று அறிகிறான் என்று கூறுகிறான். பிறகு அடியான் மீண்டும் பாவம் செய்து விடுகிறான். பிறகு என் இரட்சகனே! என் பாவத்தை மன்னிப்பாயாக! என்று கூறுகிறான். அப்பொழுது அல்லாஹூ தஆலா, என் அடியனான் பாவம் செய்து விட்டான். பாவத்தை மன்னிக்கும், மற்றும் பாவத்தைக் கொண்டு பிடிக்கும் இரட்சகன் தனக்கு உண்டு என அறிந்துள்ளான் எனக் கூறுகிறான். பிறகு மீண்டும் பாவம் செய்து விடுகிறான். பிறகு என் இரட்சகனே! என் பாவத்தை மன்னிப்பாயாக! என்று கூறுகிறான். அப்பொழுது அல்லாஹூ தஆலா, என்

அடியான் பாவம் செய்து விட்டான். பாவங்களை மன்னிக்கும் மற்றும் பாவங்களைக் கொண்டு பிடிக்கும் இரட்சகன் தனக்கு உண்டு என அறிந்துள்ளான். என் அடியானை நான் மன்னித்து விட்டேன். அவன் விரும்பியதை அவன் செய்யட்டும் எனக் கூறுகிறான். (அவன் விரும்பியதைச் செய்யட்டும் என்பதின் கருத்து, அவன் அவ்வாறு பாவம் செய்து விட்டு தவ்பா செய்யும் பொழுதெல்லாம் அவனை நான் மன்னிப்பேன் என்பதாகும். ஏனெனில் நிச்சயமாக தவ்பா அதற்கு முந்திய பாவங்களை அழித்து விடுகிறது. புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

நிச்சயமாக அல்லாஹு தஆலா, பகலில் பாவம் செய்தவன், தவ்பா செய்வதற்காக இரவில் தன் கரத்தை நீட்டுகிறான். இரவில் பாவம் செய்தவன் தவ்பா செய்வதற்காக பகலில் தன் கரத்தை நீட்டுகிறான். சூரியன் மேற்கில் உதயமாகும் வரை (கியாமத் நாள் வரை) இவ்வாறே செய்து வருவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிம்: அபூ மூஸா அல்அஷ்அரீ (ரலி).

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அவர்கள் ஊழியர் அபூஹம்ஸா அனஸ் பின் மாலிக் அல் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உங்களில் ஒருவர் வனாந்தரத்தில் காணாமல் போய்விட்ட தம் ஒட்டகையின் மீது விழுவாரேயானால் (அதனை அவர் பெற்றுக் கொள்வாரேயானால்) அப்பொழுது அவர் அடைகிற மகிழ்ச்சியைவிட (பன்மடங்கு) அதிகமாக தன் அடியான் தன்னிடம் தவ்பாச் செய்து மீளும் பொழுது அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான்.

முஸ்லிமின் அறிவிப்பில், நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். உங்களில் ஒருவரது வாகனம்-அதில் தான் அவருடைய உணவும், குடிநீரும் உள்ளது. அது காணாமல் போய் அவர் ஆதரவிழந்தவராக ஒரு மரத்தின் நிழலில் நின்று கொண்டிருக்கும் பொழுது அவ்வாகனம் அவர் முன் திடீரெனத் தோன்றினால் அவர் எவ்வளவு மகிழ்ச்சியடைவாரோ, அதனை விட (பன் மடங்கு) அதிகமாக தன் அடியான் தன்னிடம் தவ்பாச் செய்து மீளும் பொழுது அல்லாஹ் மகிழ்ச்சியடைகிறான். அவர் தம் வாகனத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு மாபெரும் மகிழ்ச்சியில் திளைத்தவராக இறைவா! நீ என் அடிமை நான் உன் எஜமானன் என்று கூறிவிடுகிறார். அதிக மகிழ்ச்சியில் திளைத்ததால் நா தடுமாறி இவ்வாறு தவறாக கூறிவிடுகிறார். (இம்மனிதனின் மாபெரும் மகிழ்ச்சியை விட மிக அதிகமாக தன் அடியான் தவ்பாச் செய்யும் போது அல்லாஹு தஆலா மகிழ்ச்சியடையகிறான்) புகாரி, முஸ்லிம்: அபூ ஹம்ஸா அனஸ் பின் மாலிக் அல் அன்ஸாரி (ரலி).

சூரியன் மறைந்ததிலிருந்து அது உதயமாகும் முன்பு (இரவில்) யார் தவ்பாச் செய்கிறாரோ அவரின் தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

(மரணத் தருவாயில்) தொண்டைக் குழியை உயிர் வந்து சேராமலிக்கும் வரை (உயிர் பிரிவதற்காக தொண்டைக் குழியில் உயிர் இழுத்துக் கொண்டிருப்பதற்கு முன்பு வரை) நிச்சயமாக அல்லாஹு தஆலா அடியானின் தவ்பாவை ஏற்றுக் கொள்வான். திர்மிதி: அபூ அப்திர் ரஹ்மான் உமர் பின் கத்தாப் (ரலி).

உங்களுக்கு முன் வாழ்ந்த மக்களில் ஒரு மனிதன் இருந்தான். அவன் 99 பேரைக் கொலை செய்திருந்தான். பிறகு அவன் (இம்மாபெரும் கொடிய பாவங்களிலிருந்து தவ்பாச் செய்து மீளுவதற்குறிய வழி முறைகளைத் தெரிந்து கொள்வதற்காக) பூமியிலேயே மிகப் பெரிய அறிஞர் யார் என விசாரித்தான். பனூ இஸ்ராயீல் கூட்டத்தாரைச் சேர்ந்த ஓர் அறிஞரை பூமியில் மிகப் பெரிய அறிஞர் (இவர் தாம்) என அவனுக்கு கூறப்பட்டது. அவன் அவரிடத்தில் சென்று தான் 99 பேரைக் கொன்று விட்டதைக் கூறி, தனக்கு தவ்பா உண்டா? என்று கேட்டான். அதற்கு அவ்வறிஞர் இல்லை என பதிலளித்தார். உடனே அவரையும் கொன்றான். அவருடன் 100 பேரை பூர்த்தி செய்து விட்டான். பின்னர் அவன் இப்பூமியில் மிகப் பெரிய அறிஞர் யாரென வினவினான். அவனுக்கு ஓர் அறிஞரை

அறிவிக்கப்பட்டது. அவன் அவரிடத்தில் சென்று தான் நூறு பேரைக் கொன்றதைப் பற்றிக் கூறி தனக்கு தவ்பா உண்டா? என்று கேட்டான். அதற்கவர் ஆம் உண்டு, உனக்கும் தவ்பாவுக்கும் மத்தியில் யார் தடையாக இருக்கமுடியும், நீ இன்ன இன்ன இடங்களுக்குச் செல்வாயாக! அங்கு அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருக்கும் (நல்ல) மனிதர்கள் உள்ளனர். அவர்களுடன் சேர்ந்து நீயும் அல்லாஹ்வை வணங்குவாயாக! உனது இடத்திற்கு நீ திரும்பிச் செல்லாதே! இது கெட்ட பூமியாகும் எனக் கூறினார். அதன் படி அந்த மனிதன் பாதி தூரம் நடந்திருப்பான். அதற்குள் மரணம் வந்து விட்டது. அவனது (உயிரைக் கைப்பற்றும்) விஷயத்தில் ரஹ்மத்துடைய (இறையருளின்) வானவர்களுடன் அதாவுடைய(இறை வேதனையின்) வானவர்களும் போட்டி போட்டுக் கொண்டார்கள். அவன் தவ்பாச் செய்தவனாக, தன் இதயத்தால் அல்லாஹ்வின் பக்கம் முன்னோக்கியவனாக வந்தான் என ரஹ்மத்தின் வானவர்களும், அவன் எந்த நல்ல அமல்களையும் செய்ய வில்லை, என அதாபின் மலக்குகளும் வாதாடினார்கள். அப்பொழுது ஒரு மலக்கு மனித வடிவில் அவர்களிடம் வந்தார். அவரை அவர்கள் தங்களுக்கு மத்தியில் தீர்ப்பளிப்பவராக ஆக்கினார்கள். அவர் இரண்டு (அவர் வந்த மற்றும் போக வேண்டிய) பூமிகளையும் அளந்து பாருங்கள், அவ்விரண்டு பூமிகளில் அவர் எதற்கு நெருக்கமானவராக இருக்கிறாரோ, அவர் அதற்கே உரியவராவார் எனக் கூறினார். அதன்படி அவர்களின் இரு பூமிகளையும் அளந்தார்கள், அவர் (தவ்பாவை) நாடி வந்த பூமிக்கே நெருக்கமானவராக இருந்தார். ஆகவே ரஹ்மத்தின் மலக்குகள் அவரின் உயிரைக் கைப்பற்றினார்கள்.

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், அவர் தவ்பாச் செய்யச் சென்ற நல்ல பூமியின் பக்கம் ஓர் அடி கூடுதலாக இருந்தார். ஆகவே அந்த நல்ல பூமியைச் சேர்நதவராக அவர் ஆக்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. புகாரி,முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், அவர் கடந்து வந்த பூமியை தூரமாக்கும்படியும், நல்ல பூமியை அவருக்கு நெருக்கமாகும்படியும் அல்லாஹ் உத்திரவிட்டான். பின்னர் அப்பூமிகளை அளக்கும் படி கூறினான். அப்பொழுது அவர் மற்றதை விட தவ்பாவின் பூமிக்கு, ஓர் அடி நெருக்கமாக இருந்தார். ஆகவே அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், அவர் தம் மரணம் நெருங்கியதும், தமது நெஞ்சால் நகர்ந்து கொண்டே அந்த பூமியின் பக்கம் நெருக்கமானார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.) புகாரி,முஸ்லிம்: அபூ ஸயீத் ஸஃது பின் மாலிக் பின் ஸினான் அலகுத்ரீ(ரலி).

ஒருவர் மற்றவரைக் கொன்று விட்ட நிலையில் இரண்டு பேரும் சுவனம் செல்வதைப் பார்த்து அல்லாஹ் சிரிக்கிறான். ஒருவர் அல்லாஹ்வின் பாதையில் போரிட்டார். அவர் அதில் கொல்லப்படுகிறார். பின்னர் அவரைக் கொன்றவர் (தவ்பாச் செய்து அல்லாஹ்வின் பக்கம் மீளுகிறார்) அல்லாஹ் அவரது தவ்பாவை ஏற்றுக்கொள்கிறான். அல்லாஹ்வுக்கு வழிபடுகிறார், பின்னர் அல்லாஹ்வின் பாதையில் அவரும் ஷஹீது-வீரமரணம் எய்தி விடுகிறார்.(இந்த இரண்டாவது நபர் தவ்பாச் செய்து திருந்தி ஷஹீதாகிவிடுவதால் அவருக்கும் சுவர்க்கம் கிடைத்து விடுகிறது.) புகாரி,முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

## உழைத்து உண்ணுதல்.

62:10 பின்னர், (ஜும்ஆ) தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டதும், (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள் அன்றியும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, அல்லாஹ்வை அதிமதிகம் தியானம் செய்யுங்கள்.

உங்களில் ஒருவர் தன் கயிற்றை எடுத்துக் கொண்டு, மலைக்குச் சென்று ஒரு விறகுக் கட்டை தன் முதுகில் சுமந்து வந்து அதனை விற்று அதன் மூலம் அல்லாஹ் அவரின் முகத்தை(கேட்பதை விட்டும்)

தடுத்து விடுவது, மக்களிடம் அவர் கேட்பதைவிடச் சிறந்ததாகும், (ஏனெனில் மக்களிடம் கேட்கும்பொழுது அவர்கள்) (விரும்பினால்) அவருக்கு கொடுப்பார்கள்(இல்லையெனில்)மறுத்து விடுவார்கள். புகாரி: அபூ அப்தில்லாஹ் ஜு பைர் பின் அவாம்(ரலி).

(நபி)ஜக்கரியா (அலை) அவர்கள், மரவேலைகள் செய்யும் தச்சராக இருந்தார்கள். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

தன் கரத்தால் உழைத்து உண்ணும் உணவை விட மிகச் சிறந்த உணவை, ஒரு பொழுதும் யாரும் உண்ணுவதில்லை. நிச்சயமாக அல்லாஹ்வின் நபி தாவூது(அலை)அவர்கள், தங்கள் கரத்தால் உழைத்து உண்ணுபவர்களாக இருந்தார்கள். புகாரி: மிக்தாம் பின் மஃதீகரிப்(ரலி).

உங்களில் ஒருவர் ஓர் விறகுக்கட்டை தன் முதுகில் (சுமந்து) கொண்டு வருவது, பிறரிடம் கேட்பதை விட அவருக்கு சிறந்ததாகும். அவர் கேட்ட மனிதன் (விரும்பினால்) அவருக்குக் கொடுப்பான் (இல்லையெனில்) மறுத்து விடுவான். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

## போதுமென்ற மனம், எளிமையைப் பேணுதல்.

---

25:63 இன்னும் அர்ரஹ்மானுடைய அடியார்கள் (யாரென்றால்) அவர்கள்தாம் பூமியில் பணிவுடன் நடப்பவர்கள் மூடர்கள் அவர்களுடன் பேச(வாதாட) முற்பட்டால் "ஸலாம்" (சாந்தியுண்டாகட்டும் என்று) சொல்லி (விலகிப் போய்) விடுவார்கள்.

57:20 அறிந்து கொள்ளுங்கள் "நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும் மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும் பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும் (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும் (அதாவது) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப் படுத்துகிறது. ஆனால், சீக்கரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கிறீர் பின்னர் அது கூளமாகி விடகிறது (உலக வாழ்வும் இத்தகையதே எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையன வேதனையுண்டு (முஃமின்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு - ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை.

3:14 பெண்கள், ஆண் மக்கள் பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங்குவியல்கள் அடையாளமிடப்பட்ட (உயர்ந்த) குதிரைகள் (ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால் நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது. இவை(யெல்லாம் நிலையற்ற) உலக வாழ்வின் சுகப்பொருள்களாகும் அல்லாஹ்விடத்திலோ அழகான தங்குமிடம் உண்டு.

102:1 செல்வத்தைப் பெருக்கும் ஆசை உங்களை (அல்லாஹ்வை விட்டும்) பராக்கி விட்டது-

102:2 நீங்கள் கப்றுகளைச் சந்திக்கும் வரை.

102:3 அவ்வாறில்லை, விரைவில் (அதன் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

102:4 பின்னர் அவ்வாறல்ல, விரைவில் (அதன் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

102:5 அவ்வாறல்ல - மெய்யான அறிவைக் கொண்டறிந்திருப்பீர்களானால் (அந்த ஆசை உங்களைப் பராக்காக்காது).

உங்களை விட (வசதிவாய்ப்பில்) குறைவானவர்களின் பக்கம் பாருங்கள்! உங்களை விட (வசதி வாய்ப்பில்) மேலானவர்களின் பக்கம் பார்க்க வேண்டாம்! அல்லாஹ் உங்களுக்கு அருளியுள்ள அருட்கொடைகளை நீங்கள் குறைவாக மதிப்பிடாமலிருக்க இதுவே மிகப் பொருத்தமானதாகும்.

(புகாரியின் அறிவிப்பில், செல்வத்திலும், உடம்பிலும் தம்மை விட மேலானவரை உங்களில் ஒருவர் பார்த்தால், உடனே அவர் (இவைகளில்) தம்மை விட கீழானவரைப் பார்க்கட்டும். (தம் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தட்டும்) என அறிவிக்கப்பட்டுள்ளது.) புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

தங்க நாணயங்கள், வெள்ளிக் காசுகள், பழங்கள், துணிமணிகள் ஆகியவைகளின் அடிமை (இவைகளை அனுபவிப்பதிலிலேயே மூழ்கி விட்டவன்) நாசமாகி விட்டான். அவன் கொடுக்கப்பட்டால் பொருந்திக் கொள்வான். கொடுக்கப்படாவிட்டால் பொருந்திக் கொள்ள மாட்டான். புகாரி: அபூஹுரைரா(ரலி).

உலகம் முஃமினின் சிறைச்சாலையாகும். காஃபிரின் சுவர்க்கமாகும். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

அண்ணல் நபி(ஸல்)அவர்கள் என் இருதோள் புஜங்களைப் பிடித்தவர்களாக (இப்னு உமரே!) நீர் உலகில், வெளியூர் வாசியைப் போல் அல்லது பாதையைக் கடந்து செல்லும் பயணியைப் போல் ஆகிவிடும் எனக் கூறினார்கள். அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) கூறுவார்கள், நீ மாலைப் பொழுது ஆகிவிட்டால், காலைப் பொழுதை எதிர் பார்க்கவேண்டாம்! நீ காலைப் பொழுதில் ஆகிவிட்டால் மாலைப் பொழுதை எதிர்பார்க்க வேண்டாம்! உன் வியாதியின் காலத்திற்கு வேண்டி ஆரோக்கியமான காலத்தை (அதிக நல் அமல்கள் செய்வதன் மூலம்) பயன் படுத்திக்கொள்வாயாக! உன் மரணத்திற்காக வேண்டி உன் ஆயுள் காலத்தை (அதில் அதிக நல் அமல்கள் செய்வதன் மூலம்)பயன்படுத்திக் கொள்வாயாக! புகாரி: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி).

அண்ணல் நபி(ஸல்) அவர்களின் சமுகம் ஒரு மனிதர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! எந்த அமலை நான் செய்தால் அல்லாஹ்வும், மக்களும் என்னை நேசிப்பார்களோ அந்த அமலை எனக்கு அறிவித்துத் தருவீர்களாக! எனக் கூறினார். அதற்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள், உலகின் விஷயத்தில் பற்றற்று இருப்பீராக! அல்லாஹ் உம்மை நேசிப்பான். மக்களிடம் உள்ளவை மீது (மக்களின் செல்வங்கள் மீது)நீர் ஆசைப்பட வேண்டாம்! மக்கள் உம்மை நேசிப்பர் எனக் கூறினார்கள். இப்னுமாஜா: அபுல் அப்பாஸ் ஸஹ்ல் பின் ஸஃதிஸ் ஸாயிதீ(ரலி).

(ஒரு முறை) அண்ணல் நபி(ஸல்) அவர்கள் ஒரு பாயின் மீது படுத்துறங்கினார்கள். அது அவர்களின் உடலின் விலாப்பாகத்தில் அடையாளத்தை ஏற்படுத்தி விட்டது. அப்பொழுது நாங்கள், அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் தங்களுக்காக ஒரு மென்மையான விரிப்பைத் தயார் செய்கிறோம், எனக் கூறினோம். அதற்கவர்கள், எனக்கு உலகின் தேவை என்ன இருக்கிறது? ஒரு மரத்தின் நிழலில் சிறிது தங்கி, பின்னர் அதனை விட்டு புறப்பட்டுச் செல்லும் வாகனப் பயணியைப் போன்றே தவிர உலகின் விஷயத்தில் நான் இல்லை. எனக் கூறினார்கள். திர்மிதி: அப்துல்லாஹ் பின் மஸ்வூது(ரலி).

நபித்தோழர்கள் ஒருமுறை நபி(ஸல்) அவர்களிடம் உலகைப் பற்றி குறிப்பிட்டார்கள். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள், நீங்கள் கேளுங்கள்! நீங்கள் கேளுங்கள்! நிச்சயமாக எளிமையான தோற்றம், ஈமானில் நின்று முள்ளதாகும், எளிமையான தோற்றம் ஈமானில் நின்று முள்ளதாகும். என (இருமறைக்) கூறினார்கள். அபூதாவூது: அபூ உமாமா அயாஸ் பின் தஃலபா அல் அன்ஸாரி(ரலி).

நிச்சயமாக ஹலால் (ஆகுமானவை எவை என்பது) தெளிவாக உள்ளது. ஹராம் (விலக்கப்பட்டவை எவை என்பது)தெளிவாக உள்ளது. இரண்டுக்கும் மத்தியில் சந்தேகத்திற்கிடமானவை (சில)

உள்ளன. அவற்றை அதிகமாக மக்கள் அறியமாட்டார்கள். யார் சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்த்து கொள்கிறாரோ அவர், தம் மார்க்கத்தையும், தம் கண்ணியத்தையும் காப்பாற்றிக் கொண்டவராவார். யார் சந்தேகத்திற்கிடமானவற்றில் வீழ்ந்து விடுகிறாரோ, அவர் ஹராமில் வீழ்ந்து விடுவார். அவர் வேலியைச் சுற்றி(தம் ஆடுகளை) மேய்க்கும் ஒரு மேய்ப்பாளரைப் போல, (சில வேளை) அவர் அந்த வேலியிலும் மேய்த்து விடக் கூடும். அறிந்து கொள்ளுங்கள்! ஒவ்வொரு அரசருக்கும் ஓர் வேலி(தடுப்பு எல்லை) உள்ளது. நிச்சயமாக அல்லாஹ்வின் வேலி அவனால் ஹராமாக்கப்பட்டவை (விலக்கப்பட்டவை) ஆகும் (அவற்றை எச்சரிக்கையுடன் விலக்கிக் கொள்ளுங்கள்) நிச்சயமாக (உங்கள்) உடலில் ஒரு சதைத் துண்டு உள்ளது. அது சீராகி விட்டால், உடல் முழுவதும் சீராகி விடும். அது கெட்டுவிட்டால், உடல் முழுவதும் கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள்! அதுதான் இதயம். புகாரி, முஸ்லிம்: நுஃமான் பின் பஷீர்(ரலி).

நன்மை செய்வது நற்குணமாகும், தீமை என்பது, உம் உள்ளத்தை உறுத்தக் கூடியதும், மக்கள் அதனைப் பார்த்து விடுவதை நீர் வெறுக்கக் கூடியதுமாகும். முஸ்லிம்: நவாஸ் பின் ஸம்ஆன்(ரலி).

நான் நபி(ஸல்) அவர்களிடம் வந்தேன். (நான் வந்ததும்) நன்மையைப் பற்றி எம்மிடம் கேட்க வந்துள்ளீரா? என அவர்களாகவே (முந்திக்) கேட்டார்கள். நான் ஆம் எனக் கூறினேன். (நன்மை எது? தீமை எது? என்பதை) உம் உள்ளத்திடமே தீர்ப்பைக் கேளும்! உம் மனதும், உள்ளமும் எதனைப் பற்றி நிம்மதியடைந்து விடுகிறதோ அது நன்மையாகும். உம் மனதையும் உம் உள்ளத்தையும் எது உறுத்துகிறதோ அது பாவமாகும். மக்கள் அதனைச் சரியென உமக்குத் தீர்ப்பு வழங்கினாலும் சரியே. அஹ்மத்,தாரமீ: வாபிஸா பின் மஃபித்(ரலி).

நான் நபி(ஸல்) அவர்களிடமிருந்து மனப்பாடமிட்டுக் கொண்டேன் (அவை) உமக்கு சந்தேகமளிக்கும் விஷயத்தை விட்டுவிட்டு, உமக்கு சந்தேகம் அளிக்காத விஷயத்தின் பால் சென்று விடுவீராக! திர்மிதி: ஹஸன் பின் அலீ(ரலி).

கூடாத விஷயங்களை (செய்து விடுவோமா என்று) அஞ்சியதற்காக, பரவாயில்லை என்ற விஷயத்தைக் கூட விட்டு விடாதவரை, அடியான் முத்தகீன் எனும் இறையச்சமிக்கோரில் ஆகமாட்டான். திர்மிதி: அதிய்யா பின் உர்வா அஸ்ஸஃதீ(ரலி).

நீங்கள் பணிவைக் கடைபிடியுங்கள்! ஒருவர் மீது ஒருவர் பெருமையடிக்க வேண்டாம்! என அல்லாஹ் எனக்கு வஹி அனுப்பி இருக்கிறான் என மாநபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிம்: இயாழ் பின் ஹிமார்(ரலி).

தர்மம் செய்வது, செல்வத்தைக் குறைத்து விடாது. பிறரை மன்னிப்பதின் காரணமாக அடியானின் கண்ணியத்தை அல்லாஹ் அதிகப்படுத்தவே செய்வான். அல்லாஹ்வுக்காக பணிபவரை அல்லாஹ் உயர்த்தவே செய்வான். (அவரின் அந்தஸ்துகளை உயர்த்துவான்) முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

அனஸ்(ரலி)அவர்களைப் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது: அவர்கள் சிறு பிள்ளைகளைக் கடந்து சென்றால், அவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள். மேலும், அண்ணல் நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு தான் (சிறு பிள்ளைகளுக்கும்)ஸலாம் கூறுபவர்களாக இருந்தார்கள் என்றும் கூறினார்கள். புகாரி,முஸ்லிம்: அனஸ்(ரலி).

(அண்ணல் நபி(ஸல்)அவர்களின் பணிவு எந்த அளவிற்கு இருந்ததென்றால்) மதீனாவின் அடிமைப் பெண்களில் ஒருவர் அண்ணல் நபி(ஸல்)அவர்களின் கரத்தைப் பிடித்து தான் நாடும் இடங்களுக்கு அழைத்துச் செல்லலாம். புகாரி: அனஸ்(ரலி).

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தங்கள் வீட்டில் என்ன செய்பவர்களாக இருந்தார்கள்? என ஆயிஷா(ரலி)அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், அண்ணலார்(ஸல்)அவர்கள் வீட்டில் தங்கள் குடும்பத்தினரின் வேலைகளில் ஈடுபடுபவர்களாக இருப்பார்கள். தொழுகை நேரம் வந்து விட்டால், தொழுகைக்குப் புறப்பட்டுச் செல்வார்கள் என மறுமொழி கூறினார்கள். புகாரி: அஸ்வத் பின் யஜீது(ரலி).

நான் (ஒருமுறை) என் ஊரிலிருந்து அண்ணல் நபி(ஸல்) அவர்களின் சமூகம் போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது அவர்கள் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் யா ரஸூ லல்லாஹ்! வெளியூரிலிருந்து வந்துள்ள ஒரு மனிதர் தம் மார்க்கத்தைப் பற்றிக் கேட்கிறார். அவர் தம் மார்க்கத்தைப் பற்றி அறியவில்லை எனக் கூறினேன். உடனே(அவர்கள் தங்கள் சொற்பொழிவை இடையிலேயே நிறுத்தி விட்டு என்னிடம் வந்தார்கள்) அவர்களுக்காக ஒரு நாற்காலி கொண்டுவரப்பட்டது, அதன் மீது அவர்கள் அமர்ந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தவற்றிலிருந்து எனக்கு அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். பின்னர் தங்கள் சொற்பொழிவுக்குத் திரும்பி, அதனை இறுதிவரை நிறைவு செய்தார்கள். புகாரி: அபூரிபாஆ தமீம் பின் உஸைது(ரலி).

தன் வேட்டியை பெருமைக்காக (தரைகூட்ட) இழுத்துச் செல்பவனை அல்லாஹ் தன் (அருட்பார்வையால்) பார்க்க மாட்டான். புகாரி, முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

## உண்மைப் பேசுதல்

---

9:119ஈ மான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் மேலும் உண்மையாளர்களுடன் நீங்களும் ஆகிவிடுங்கள்.

33:35 நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், பெண்களும் நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் இறைவழிபாடுள்ள ஆண்களும், பெண்களும் உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும் பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும் (அல்லாஹ்விடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும், பெண்களும் தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும் தங்கள் வெட்கத்தலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும் அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் - ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றான்.

47:21 (ஆகவே, இறைதூதருக்கு) வழிபட்டு நடப்பதும், நன்மையான சொல்லுமே (மேலானதாகும்) எனவே, ஒரு காரியம் உறுதியாகி விட்டால், அல்லாஹ்வுக்கு அவர்கள் உண்மையாக நடந்து கொண்டால் அதுவே அவர்களுக்கு நன்மையாக இருக்கும்.

நிச்சயமாக உண்மை நன்மையின் பக்கம் வழிகாட்டும். நிச்சயமாக நன்மை சுவனத்தின் பக்கம் வழிகாட்டும். நிச்சயமாக ஒருவர் உண்மை கூறுகிறார் என்றால் அவர் அல்லாஹ்விடம் உண்மையாளர் என எழுதப்படுகிறார். நிச்சயமாக பொய் பாவத்ததின் பக்கம் வழிகாட்டும். நிச்சயமாக பாவம் நரகத்தின் பக்கம் வழிகாட்டும். நிச்சயமாக ஒருவர் பொய்யுரைக்கிறார் என்றால், அவர் அல்லாஹ்விடம் பொய்யர் என எழுதப்படுகிறார். புகாரி,முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் மஸ்வூது(ரலி).

நான் நபி(ஸல்)அவர்கள் கூற மனப் பாடமிட்டுள்ளேன். (அவர்கள் கூறினார்கள்) உம்மைச் சந்தேகத்தில் ஆழ்த்துபவைகளை விட்டு விட்டு சந்தேகத்தில் ஆழ்த்தாதவைகளின்பால் செல்வீராக!

ஏனெனில் உண்மை நிம்மதியாகும், பொய் சந்தேகமாகும். (உண்மை நிம்மதியை வழங்கும். பொய் சந்தேகத்தையும், குழப்பத்தையும் அளிக்கும்) திர்மிதி: அபூ முஹம்மது ஹஸன் பின் அலீ பின் அபீதாலிப் (ரலி).

குறைஷித் தலைவர் அபூ ஸூ ஃப்யான் ஸஹ்ரு பின் ஹர்பு (ரலி) (இஸ்லாத்தைத் தழுவுமுன்) ரோமப் பேரரசர் ஹிர்கல் என்பவருடன், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறித்து உரையாடிய நீண்ட உரையாடலில் (பின்வரும் விஷயமும்) அடங்கியிருந்தது, ஹிர்கல் கேட்டார்: அந்த நபி உங்களுக்கு எதனை ஏவுகிறார்? அதற்கு அபூஸூ ஃப்யான் கூறினார், அந்த நபி (எங்களுக்கு) கூறுகிறார், அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்! அவனுக்கு எப்பொருளையும் இணைவைக்காதீர்கள்! உங்கள் முன்னோர்கள் கூறிக்கொண்டிருந்தவைகளை (மூடப்பழக்க வழக்கங்களை) விட்டு விடுங்கள். மேலும் அந்த நபி, எங்களுக்கு தொழுகையைக் கொண்டும், உண்மைப் பேசுவது கொண்டும், பேணுதலைக் கொண்டும், உறவினரைச் சேர்த்து வாழ்வது கொண்டும் ஏவுகிறார். புகாரி, முஸ்லிம்: அபூ ஸு ப்யான் ஸஹ்ரு பின் ஹர்பு (ரலி).

அபூதாபித் மற்றொரு சொல்லில் அபூஸயீது, மற்றொரு சொல்லில் அபூ வலீது ஸஹ்ல் பின் ஹூ னைப் (ரலி) -இவர் பத்ரு ஸஹாபியாவார்-அறிவிக்கிறார்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், உண்மையாகவே யார் ஷஹாதத்தை (இறைவனின் திருப்பாதையில் வீர மரணமடைவதை அல்லாஹூ தஆலாவிடம்) கேட்கிறாரோ, அவரை ஷு ஹதாக்களது அந்தஸ்த்தில் அல்லாஹூ தஆலா சேர்த்து வைக்கிறான். அவர் தம் விரிப்பில் (சாதாரணமாக) மரணமடைந்த போதிலும் சரியே!. முஸ்லிம்: அபூ வலீது ஸஹ்ல் பின் ஹூ னைப் (ரலி).

## உறுதியுடன் நிலைத்திருப்பது.

---

11:12 (நபியே! நம் வசனங்களை அவர்கள் செவிமடுப்பதில்லையே எனச் சடைந்து) வஹீ மூலம் உமக்கு அறிவிக்கப்பட்டவற்றில் சிலவற்றை விட்டுவிட எண்ணவோ, "அவர் மீது ஒரு பொக்கிசம் இறக்கப்பட வேண்டாமா? அல்லது அவருடன் ஒரு மலக்கு வரவேண்டாமா?" என்று அவர்கள் கூறுவதினால் உம் இதயம் (சஞ்சலத்தால்) இடுங்கியிருக்கவோ கூடும் நிச்சயமாக நீர் அச்சமூட்டி எச்சரிப்பவரேயன்றி வேறில்லை அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் பொறுப்பாளனாக இருக்கிறான்.

41:30 நிச்சயமாக எவர்கள் "எங்கள் இறைவன் அல்லாஹ்தான்" என்று கூறி, (அதன் மீது) உறுதியாக நிலைத்து நின்றார்களோ, நிச்சயமாக அவர்கள்பால் மலக்குகள் வந்து, "நீங்கள் பயப்படாதீர்கள் கவலையும் பட வேண்டாம் - உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்" (எனக் கூறியவாறு) இறங்குவார்கள்.

41:31 "நாங்கள் உலக வாழ்விலும், மறுமையிலும் உங்களுக்கு உதவியாளர்கள் மேலும் (சுவர்க்கத்தில்) உங்கள் மனம் விரும்பியதெல்லாம் அதில் உங்களுக்கு இருக்கிறது - அதில் நீங்கள் கேட்பதெல்லாம் உங்களுக்குக் கிடைக்கும்.

41:32 "மிகவும் மன்னிப்பவன், மிக்க கிருபையுடையவனிடமிருந்துள்ள விருந்தாகும்" (இது என்று கூறுவார்கள்).

46:13 நிச்சயமாக எவர்கள் "எங்கள் இறைவன் அல்லாஹ்வே" என்று கூறி, பிறகு அதிலேயே நிலைத்து நிற்கிறார்களோ அவர்களுக்கு பயமில்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

46:14 அவர்கள் தாம் சுவர்க்கவாசிகள் அதில் அவர்கள் நன்மை செய்து கொண்டிருந்ததற்குக் கூலியாக அதில் அவர்கள் என்றென்றும் தங்குவார்கள்.

அல்லாஹ்வின் மீது தவக்குல் எனும் முழுப்பொறுப்புச் சாட்டும் முறையில் நீங்கள் முழுமையகப் பொறுப்புச் சாட்டினால், பறவைகளுக்கு உணவளிப்பது போன்று அல்லாஹ் உங்களுக்கும் உணவளிப்பான். பறவை காலையில் வயிறு ஒட்டியதாகச் செல்கிறது. மாலையில் வயிறு நிரம்பித் திரும்புகிறது. திர்மிதி: உமர் (ரலி).

அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அறிவிக்கிறார்கள்: அவர்களும், அவர்கள் தந்தையும், தாயும் நபித்தோழர்கள் ஆவார்கள். நாங்கள் (நானும் நபியவர்களும் தவ்ரு) குகையில் இருந்த பொழுது எங்களைத் தேடி வந்த (மக்காவின்) இணைவைப்பாளர்களின் கால்களை நான் பார்த்தேன் அவர்கள் எங்கள் தலைகளுக்கு மேல் இருந்தார்கள். அப்பொழுது நான் அல்லாஹ்வின் திருத்தூதரே! அவர்களின் ஒருவன் தன் பாதங்களுக்கு கீழ் பார்ப்பானேயானால் நம்மை அவன் பார்த்துவிடுவான் எனக் கூறினேன். அதற்கு நபியவர்கள், அபூபக்கரே! இருவரைப் பற்றி உமது எண்ணம் என்ன? அவ்விருவருடன் மூன்றாமவனாக அல்லாஹ் இருக்கிறான். (அல்லாஹ் நம்மிருவருடன் உள்ளான். ஆகவே நமக்கு எவ்வித ஆபத்தும் வராது) எனக் கூறினார்கள். புகாரி, முஸ்லிம்: அபூபக்ர் ஸித்தீக் (ரலி).

(மக்களே!) நீங்கள் நடு நிலையாக செயல்படுங்கள்! உறுதியாக நில்லுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உங்களில் எவரும் தம் அமலைக் கொண்டு (மட்டும்) ஈடேற்றம் அடைந்து விட முடியாது. ஏன்றபொழுது தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே! தாங்களுமா? என வினவினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (ஆம்) நானும் தான் ஈடேற்றமடைய முடியாது, அல்லாஹ் என்னைத் தனது அருளைக் கொண்டும், கிருபையைக் கொண்டும் அரவணைத்துக் கொண்டாலே தவிர எனக் கூறினார்கள். முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

பலமுள்ள முஃமின், பலவீனமான முஃமினை விடச் சிறந்தவரும் அல்லாஹ்விற்கு அதிக உவப்பானவருமாவார். அவ்விருவரில் ஒவ்வொருவரிலும் நலவு உள்ளது. உனக்கு பயன் வழங்கும் (நற் செயல்கள் மீது) பேராவல் கொள்க. அல்லாஹ்வைக் கொண்டு உதவி தேடிக் கொள்வீராக. பலவீனமாக ஆகிவிடாதீர்! உமக்கு ஏதாவது சோதனை வந்து விட்டால் நான் இவ்வாறு செய்திருந்தால் இவ்வாறு ஆகியிருக்குமே எனக் கூறாதீர். என்றாலும் அல்லாஹ் இவ்வாறு விதித்திருந்தான். அவன் எதனை நாடுகிறானோ அதனைச் செய்வான் எனக் கூறுவீராக! நிச்சயமாக நான் இவ்வாறு செய்திருந்தால் என்னும் வார்த்தை ஷைத்தானின் செயலைத் திறப்பதாக உள்ளது. முஸ்லிம்: அபூஹுரைரா (ரலி).

## ஆடையும், அவற்றின் ஒழுக்கங்களும்.

---

7:26 ஆதமுடைய மக்களே! மெய்யாகவே, நாம் உங்களுக்கு உங்களுடைய மானத்தை மறைக்கவும், உங்களுக்கு அலங்காரமாகவும், ஆடையை அளித்துள்ளோம். ஆயினும் தக்வா (பயபக்தி) எனும் ஆடையே (அதைவிட) மேலானது. இது அல்லாஹ்வுடைய (அருளின்) அடையாளங்களில் (ஒன்றாக) உள்ளதாகும் - (இதைக் கொண்டு) நல்லுணர்வு பெறுவார்களாக.

16:81 இன்னும் அல்லாஹ் தான் படைத்துள்ளவற்றிலிருந்து உங்களுக்கு நிழல்களையும் ஏற்படுத்தினான் மலைகளிலிருந்து உங்களுக்கு(த் தங்குமிடங்களாக) குகைகளையும் ஏற்படுத்தினான் இன்னும்

வெப்பத்திலிருந்து உங்களைப் பாதுகாக்கக்கூடிய சட்டைகளையும் உங்களுடைய போரில் உங்களை பாதுகாக்கக்கூடிய கவசங்களையும் உங்களுக்காக அமைத்தான் நீங்கள் (அவனுக்கு) முற்றிலும் வழிப்பட்டு நடப்பதாக, இவ்வாறு தன் அருட்கொடையை உங்களுக்குப் பூர்த்தியாக்கினான்.

உங்கள் ஆடைகளில் வெள்ளை ஆடையை அணியுங்கள், நிச்சயமாக அது உங்கள் ஆடைகளில் மிகச் சிறந்ததாகும். அதனைக் கொண்டே உங்களில் மரணித்தவர்களுக்குக் கஃபன் அணிவியுங்கள். அபூதாது,திர்மிதி: அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி).

மாநபி(ஸல்) அவர்கள் நடுத்தர உயரமுடையவர்களாக இருந்தார்கள். அவர்களை ஒரு ஜோடி சிவப்பு ஆடை அணிந்தவர்களாக பார்த்துள்ளளேன். அவர்களை விட அழகான எப்பொருளையும் நான் ஒரு பொழுதும் பார்த்ததில்லை. புகாரி,முஸ்லிம்: பராவு பின் ஆஜிப்(ரலி).

நான் நபி(ஸல்) அவர்களை பார்த்துள்ளேன். அவர்கள் மேனியில் இரண்டு பச்சை ஆடைகள் இருந்தன. அபூதாவூது,திர்மிதி: அபூ ரிம்ஸா ரிபாஅத்துத்தைமீ(ரலி).

நபி(ஸல்) அவர்கள் மக்கா வெற்றிபெற்ற நாளில் மக்காவில் நுழைந்தார்கள். அப்பொழுது அவர்கள் கருப்புத் தலைப்பாகை அணிந்திருந்திருந்தார்கள். முஸ்லிம்: ஜாபிர்(ரலி).

நபி(ஸல்) அவர்கள் ஒரு நாள் காலையில் தங்கள் வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டார்கள். அப்பொழுது அவர்கள் கருப்பு முடியால் செய்யப்பட்ட ஒட்டகச் சேனத்தின் குச்சி வடிவம் போடப்பட்ட கம்பளியால் ஆன நீண்ட மேலங்கியை அணிந்திருந்தார்கள். முஸ்லிம்: ஆயிஷா(ரலி).

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், யார் உயர்வான ஆடைக்கு சக்தி பெற்றவராக இருந்தும் அல்லாஹ்வுக்கு பணிந்ததற்காக அதனை விட்டு விடுகிறாரோ அவரை படைப்புகளுக்கு முன்னால் அல்லாஹ் அழைத்துஈ மானின் ஆடைகளில் (சுவனத்து ஆடைகளில்) எதனை அவர் விரும்புகிறாரோ, அதனை அணிந்து கொள்ளுமாறு கூறுவான்.திர்மிதி: முஆது பின்அனஸ்(ரலி).

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக அல்லாஹ் தன் அருட்கொடையின் அடையாளம் தன் அடியானின் மீது பார்க்கப்படுவதை விரும்புகிறான். திர்மிதி: அப்ரு பின் ஷு ஐப்(ரலி).

ஜு பைர்(ரலி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ப்(ரலி) ஆகிய இருவருக்கும் சொறி இருந்ததின் காரணமாக அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவ்விருவருக்கும் பட்டை அணிந்து கொள்ள அனுமதித்தார்கள். புகாரி, முஸ்லிம்: அனஸ்(ரலி).

## சபை ஒழுக்கம்

58:11ஈ மான் கொண்டவர்களே! சபைகளில் “நகர்ந்து இடங்கொடுங்கள்” என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால், நகர்ந்து இடம் கொடுங்கள் அல்லாஹ் உங்களுக்கு இடங்கொடுப்பான் தவிர, ‘எழுந்திருங்கள்” என்று கூறப்பட்டால், உடனே எழுந்திருங்கள் அன்றியும், உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும் கல்வி, ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் - அல்லாஹ்வோ நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

அல்லாஹ்வை புகழ்ந்து ஆரம்பிக்காத எந்தப்பேச்சும் குறையுடையதே. அபூஹு ரைரா(ரலி) : அபூதாவூத், அஹ்மத்

ஒரு சபைக்கு வருபவர் அங்கிருப்பவருக்கு ஸலாம் சொல்லட்டும். அங்கிருந்து செல்லும் போதும் அவர் ஸலாம் கூற வேண்டும். முந்திய (ஸலாம்) பிந்தியதைவிட சிறந்ததல்ல என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். அபூதாவூத், திர்மிதி, அஹ்மத்.

அவையில் அமர்ந்துள்ள ஒருவரை அவ்விடத்திலிருந்து எழுப்பி விட்டுவிட்டு அவ்விடத்தில் உங்களில் ஒருவர் அமரவேண்டாம். எனினும் நீங்கள் விஸ்தீரணமாகுங்கள் (நெருங்கி அமர்ந்து வந்தவருக்கு இடம்தாருங்கள்) (இதன் பின்) அப்துல்லாஹ் பின் உமர்(ரலி)அவர்கள் தங்களுக்காக யாராவது ஒருவர் எழுந்து தன் இடத்தை விட்டுக் கொடுத்தால் அந்த இடத்தில் அமரமாட்டார்கள். புகாரி,முஸ்லிம்: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி).

உங்களில் ஒருவர் தம் இடத்திலிருந்து எழுந்து சென்று பின்னர் திரும்பி வருவாரானால் அவ்விடத்தில் அமர அவரே மிக உரிமைப் பெற்றவர் ஆவார். முஸ்லிம்: அபூஹுரைரா(ரலி).

நாங்கள் நபி(ஸல்) அவர்களின் சமூகம் வருவோமானால் எங்களில் ஒருவர் அந்த அவை முடிவடையுமிடத்தில் (அவையின் கடைசியில் காலியாக உள்ள இடத்தில்)அமர்ந்து கொள்வார். மக்களைத் தாண்டிக் கொண்டு அவையின் உட்பகுதிக்குச் செல்லமாட்டார். (இதுவே அவையின் ஒழுங்காகும்). அபூதாவூது,திர்மிதி: ஜாபிர் பின் ஸமுரா(ரலி).

அம்ரு பின் ஷு ஜப் தம் தந்தை ஸு ஜப் வாயிலாக அவர் தம் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார்: அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். இரண்டு பேருக்கு மத்தியில் அவர்கள் அனுமதியின்றி பிரிப்பது (இரண்டு பேரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர்களுடன் சென்று அமர்வது நிற்பது போன்றவை) ஒரு மனிதனுக்கு ஆகுமானதல்ல. அபூதாவூது,திர்மிதி: அம்ரு பின் ஷு ஜப்(ரலி).

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவையின் வட்டத்துக்கு மத்தியில் சென்று அமருபவரைச் சபித்துள்ளார்கள். அபூதாவூது: ஹுதைபா பின் அல்யமான்(ரலி).

எந்தக் கூட்டத்தினர் ஓர் அவையில் அமர்ந்து அதில் அல்லாஹ்வை திக்ரு செய்யாதவர்களாக எழுந்து விடுகிறார்களோ, அவர்கள் கைசேதமடைந்தவர்களாக ஒரு செத்த கழுதையின் அருகிலிருந்து எழுந்தவர்களைப் பொன்றாவார்கள். அபூதாவூது: அபூஹுரைரா(ரலி).

நபி(ஸல்) அவர்கள் மக்களுடன் பள்ளிவாயிலில் அமர்ந்து கொண்டிருந்த போது மூன்று பேர் வந்து கொண்டிருந்தனர். அவர்களில் இருவர் நபி(ஸல்) அவர்களை நோக்கி வந்தனர். மற்றொருவர் சென்றுவிட்டார். அவ்விருவரில் ஒருவர் வட்டமான அந்த சபையில் ஒரு இடை வெளியைக் கண்டபோது அதில் அமர்ந்து கொண்டார். மற்றவர் சபையின் பின்னால் அமர்ந்து கொண்டார். நபி(ஸல்) அவர்கள் உரையை முடித்ததும் இம் மூன்று பேர்களைப்பற்றி கூறட்டுமா என்று கேட்டார்கள். அவர்களில் ஒருவர் அல்லாஹ்வின் பக்கம் ஒதுங்கினார். அல்லாஹ்வும் அவரை அரவணைத்துக் கொண்டான். இரண்டாவரே வெட்க்ப்பட்டுக் கொண்டு (கடைசியில் உட்கார்ந்து) விட்டார். எனவே அல்லாஹ்வும் வெட்கப்பட்டுக் கொண்டான். மூன்றாமவரோ அலட்சியப்படுத்தி சென்று விட்டார் எனவே அல்லாஹ்வும் அவரை அலட்சியப்படுத்தி விட்டான் என்றார்கள். புகாரி : அபூவாக்கிதில் லைப்தீ(ரலி)

நான் நபி(ஸல்) அவர்களின் பின்னால் மதீனாவில் அஸர் தொழுதேன். தொழுத பின் நபி(ஸல்) எழுந்து விரைவாக மக்களை தாண்டி தனது மனைவியரின் இல்லங்களில் சிலவற்றிர்க்கு சென்னறார்கள். நபி(ஸல்) இவ்வாறு செல்வதை கண்ட மக்கள் அஞ்சிவிட்டார்கள் நபி(ஸல்) திரும்ப வந்து மக்கள் இவ்வாறு அஞ்சியிருப்பதையும் கண்டதும் என் வசம் சிறிது தங்கம் இருப்பது எனக்கு நினைவுக்கு வந்தது. அது என்னிடம் இருப்பதை வெறுத்தேன். ஆகவே அதை (தர்மமாக) விநியோகிக்குமாறு

கட்டளையிட்டேன் (அதற்காக வீட்டிற்கு சென்றேன்) என்று கூறினார்கள். புகாரி, நஸயீ : உக்பா பின் அல்ஹாரித் (ரலி).

ஒரு அவையில் நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு நாட்டுப்புறத்து அரபி வந்து மறுமை நாள் எப்போது? எனகேட்டார். நபி(ஸல்) அவர்கள் தமது உரையை தொடர்ந்தனர். பிறகு தனது உரையை முடித்துக் கொண்டு மறுமையைப் பற்றி கேட்டவர் எங்கே? என்று வினவினார்கள். பின்பு அவரிடம் அமானிதம் பாழ்படுத்தப்பட்டால் என்றார்கள். அதற்கவர் அது எவ்வாறு பாழ்படுத்தப்படும் என்றார். அதற்கு நபி(ஸல்) எந்தக்காரிய மானாலும் அது தகுதியற்றவரிடம் ஒப்படைக்கப்பட்டால் நீர் மறுமை நாளை எதிர்பாரும் என்றார்கள். புகாரி (ஹதீஸின் சுருக்கம்): அபூஹு ரைரா (ரலி).

நபி (ஸல்) அவர்கள் அவையின் முடிவில் அங்கிருந்து எழு நாடினால் "சுப்ஹானகல்லாஹு ம்ம வபிஹம்திக அஷ்ஹது அன்(ல்)லாயிலாஹ இல்லா அன்த அஸ்தஃபிருக வ அத்தூபு இலைக்க" என்று கூறுவார். அப்பொழுது ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் யா ரஸூ லுல்லாஹ் தாங்கள் (அவைமுடிவில்) இதற்கு முன் சொல்லாதவைகளை இப்பொழுது கூறினீர்கள் என்றார் அதற்கு நபி(ஸல்) இது அவையில் நிகழும் குற்றங்களுக்குப் பரிகாரம் ஆகும் என்றார்கள். அபூபரஜா (ரலி) : அபுதாவூத்